1241

Registered No. M. 1926

உ

கடவுள் துணை.

தர்மபோதினி.

தர்மபுரி என்னும் தலத்தினின்றும் மாதந்தோறும்
வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம், அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"—திருக்குறள்

தொகுதி 1 Vol 1 — இரக்தாக்ஷி-வரு ஆடி-மீ JULY 1924. — பகுதி 4 No. 4

உள்ளுறை

		பக்கம்.
1.	தெய்வ வணக்கம்	97
2.	சில நவீன கல்விஸ்தாபனங்கள்	98
3.	சில புண்ய க்ஷேத்திரங்கள்	104
4.	கம்பர் கவிநயம்	106
5.	புராதனக் கல்வி முறை	109
6	தனிக் கவித்திரட்டு	115
7.	பால பருவமும் அதன் பராமரிப்பும்	117
8.	சிவப்பிரகாச சுவாமிகளைப்பற்றிய சில கதைகள்	119
9.	ஹொகேனக்கல்	124
10.	ஆடிப்பெருக்கம்	126
11.	மதிப்புரை	128

விஷயதானம் செய்வோர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

(1) வியாசங்கள் அரை கடுதாசியில் பாதி இடம்விட் எழுதப்படவேண்டும். எழுத்துகள் தெளிவாயிருக்கவேண்டு

(2) பிரதி இங்லீஷ் மாதமும் 10-உக்குள் கிடைக்கும் வியாசங்களை அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்க ஏற்பாடு செய்யப்படும்.

(3) கிடைத்த வியாசங்களைப் பிரசுரிக்கவும், விஷயங்களைச் சுருக்கவேண்டிய இடங்களில் சுருக்கியும், மாற்றவேண்டிய இடங்களில் மாற்றியும் பிரசுரிக்கும் சுதந்திரம் பத்திராதிபருக்குண்டு.

(4) பிரசுரிக்கப்படாத விஷயங்களை வாபஸ்பெற விரும்புவோர் தபால் பில்லைகளை (Postage stamps) அனுப்பவேண்டியது.

சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

(1) சந்தாதாரராகச் சேர விரும்புவோர் சந்தாவை மணி ஆர்டர் மூலமாக அனுப்பி சஞ்சிகையைப் பெறுவது உசிதமானது.

(2) இடமாறுதல்களை உடனுக்குடனே பத்திராதிபருக்கு தெரிவித்துக்கொண்டால் சஞ்சிகையை அவ்விலாசத்திற்கனுப்பப் படும்.

(3) கடிதமெழுதும்போது அவர்களுடைய சந்தா நெம்பரையும் அதில் குறிப்பதுடன் பதிலை எதிர்பார்ப்போர் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

(4) சஞ்சிகை பிரதிமாதமும் 1-உ அனுப்பப்படுமாகையால் சஞ்சிகைசேராத சந்தாதாரர்கள் 10-உக்குள் தெரிவிக்கவேண்டும்

(5) 12 சந்தாதாரர்களை சேர்த்துக்கொடுக்கும் நேயர்களுக்கு ஒரு வருஷத்திய சஞ்சிகை இனாமாக அனுப்பிவைக்கப்படும்.

பத்திராதிபர்.

1241

உ

கடவுள் துணை.

தர்மபோதினி.

தெய்வபக்தி, நல்லுணர்வு, கல்வி, நாகரீகம், இயற்கைத்தத்
துவங்கள், சரித்திர ஆராய்ச்சி, இலக்கண இலக்கிய
நுட்பங்கள், முதலியவற்றுடன் வெளிவந்துலா
வும் ஓர் உயர்ந்த மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 1	இரக்தாக்ஷி-ஸூ ஆடி-மீ	பகுதி 4
Vol 1	JULY 1924.	No. 4

ஸ்ரீ கணேசர் துதி.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின்முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

(திருவிளையாடல்)

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர்மா
முனிவர்சித்த ராதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணங்கற்
பனைகடந்த செல்வமாகிக்
கருதரிய மலரின்மண மெள்ளிலெண்ணெ
யுடலுயிர்போற் கலந்தெங் நாளுந்
துரியநடு வூடிருந்த பெரியபொரு
ளியாததனைத்தொழுதல் செய்வாம்

(தாயுமானவர்)

சில நவீன கல்வி ஸ்தாபனங்கள்.

நமது நேயர்கள் புராதனக்கல்வி முறையைப்பற்றித் தொடர்ச்சியாய் இரண்டு சஞ்சிகைகளில் வெளிவந்த வியாசம் இச்சஞ்சிகையில் முடிவுற்றிருப்பதைக் காணலாம். அதை யெழுதியவர் கூறியிருக்கிறபடி முற்காலத்திய போதனுமுறைக்கும்,இப்போது ஆங்கிலேய அரசாங்கத்தார் இங்கு நடத்திவரும் முறைக்கும் வித்தியாசங்களநேகமென்று தெள்ளிதிற் புலப்படும்.

சுருக்கிக் கூறுமிடத்து முற்காலத்திய போதனுமுறையினுல், பாலர்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் கணக்கில. சுத்தமான காற்று, பச்சைப் பசேலென்று கண்களுக்குக் குளிர்மையைத்தரும் சாக்ஷி, பரந்த வெளியில் தேகாப்பியாசம் செய்வதால் ஏற்படும் ஆரோக்கியம் முதலியன அவற்றுள் முக்கியமானவை. சதாகாலம் இயற்கை யழகைக் கண்ணுற்றதாலும், தம்மைப்படைத்த ஈசன் குணதிசயங்களைப்பற்றிய விஷயங்களை ஆராய்ந்து வந்ததாலும், பகவானிடத்தில் அவர்களுக்குச் சம்பூர்ண பக்தி ஏற்பட்டிருந்தது. தத்தம் நித்திய கர்மாநுஷ்டானங்களுக்கும், உண்டு உடுப்பதற்கும் தேவையான சாமக்கிரியைகளைத் தாமே தயாரித்துக்கொண்டுவந்ததால், மனச்சந்துஷ்டியையும், பொறுமையையும் சிறுவர்கள் கொண்டிருந்தார்கள். கல்வி கற்பிக்கும் ஆசான் வீட்டிலேயோ, அல்லது வெகு அருகிலேயோ வசித்து வந்ததால், குருபக்தியும், வித்தையைக் கற்கவேண்டுமென்ற அவாவும் பெருகிவரக் காரணமாயிருந்தது. மேலும், ஆரண்ணியங்களின் மத்தியிலோ, அல்லது நகரங்களின் எல்லைக்கு வெளியிலோ, அக்கல்விஸ்தாபனங்கள் ஏற்பட்டிருந்தனவாதலின் மனத்தைக் கலக்கக்கூடிய நகரத்தோற்றங்கள் அம்மாணவர்களைப் பாதிக்காதிருந்தன. கேவலம் அறிவை விருத்தியாக்குவதுமன்றி, அக்காலத்திய ஆசிரமப் படிப்பானது, தேகாரோக்கியம், சுவதந்திரம், ஐம்பொறிகளையடக்கும் வன்மை, தன்னம்பிக்கை குருபக்தி, ஈஸ்வரபக்தி முதலிய அரும்பெருங் குணங்களைச்

சிறுவர்களுக்குக் கற்பித்தது. அவ்விதமான முறையை இக்காலத்தில் அனுசரிப்பதியியலாததோ என ஆராய்வோம்.

சுமார் முப்பது வருஷகாலமாக, மிக்க ஊக்கத்துடன் இங்கிலீஷ் கற்றதன் பயனை நம் நேயர்கள் நன்கறிவார்கள். சில வருஷங்களுக்குமுன், இங்கிலீஷ் வாசித்த ஒருவன் தன் தேசத்தினரையும், தன் மூதாதைகளையும் துரும்பென மதித்து, மதம் ஆசாரம் முதலியவற்றை வெறுத்து, மேனாட்டாரைப்போல், தலைகத்தரித்து, உடுப்புக்களை யணிந்து, நாஸ்திகனாயிருந்தது நாமனைவருமறிந்ததே. இக்கேவலமான நிலைமையை நம்மில் சிலர் உணராதிருந்தது விந்தையே. எனினும், தற்காலத்திய போதனாமுறை நம்முள் அடிமைத்தனத்தையும் கோழை மனத்தையும் ஏற்படுத்தியதை மறுப்பார் யாருமிலர். இத்துணைத் தீமைகளைச்செய்யக்கூடிய கல்வி போதனாமுறையை ஏன் இன்னும் கையாண்டு வருகிறார்கள்? எவரேனும் இதனை மாற்ற முன்வரவேயில்லையே என்ற பிரச்சனை நம்மை உறுத்துவது சகஜமே. உண்மையைக் கூறுமிடத்து 1907-வருஷத்தில் ஏற்பட்ட தேசியக்கிளர்ச்சியில் வங்காளத்திலும் மற்றும் சில இடங்களிலும் கல்வி போதனாமுறையை மாற்றப் பிரயாசைப்பட்டார்கள். ஆனால் தக்க பயன் ஏற்படவில்லை. பஞ்சாபில் ஆரிய சமாஜத்தார் ஏற்படுத்தி நடத்திவரும் தயானந்தா, ஆங்கிலோ வேதக்கல்லூரியிலும், ஹரித்துவாரத்தில் உள்ள குருகுல காங்கிரிஸ் என்னும் கல்விஸ்தாபனத்திலும், சற்று வேறுபாடுற்ற கல்வி முறையைக் கையாண்டுவருகிறார்கள். அங்குக் கல்வி பயிலும் மாணாக்கர்கள் நித்தியாசாரங்களைச் சரிவர அனுஷ்டித்து வரவும், வர்ணாசிரம தர்மங்களின் பிரகாரம் நடந்துவரவும் போதிக்கப்பட்டு வருகிறார்கள். பொதுவாக, தேசாபிவிருத்திக்காகவும், சமூக வாழ்க்கைக்காகவும், தங்களுடைய ஆத்மக்ஷேமத்திற்காகவும், தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை, அவர்கள் தங்கள் குருவினுடைய பிரசங்கங்களிலிருந்தும் அவர்கள் நடவடிக்கைகளிலிருந்தும் அறிகிறார்கள். அவ்வாசிரியர்கள், அதி நுட்ப சாஸ்திரங்களையும் தாய்ப்பாஷையாகிய ஹிந்தியிலேயே கற்றுக் கொடுக்கிறார்கள்.

ஸ்ரீகாசியில், பண்டித மதன்மோகன் மாளவய்யா, டாக்டர் அன்னி பெஸண்டு முதலிய பிரமுகர்கள், அநேக ராஜாக்களும் மற்றத் தனவான்களுங்கொடுத்தத் திரவியத்தைக்கொண்டு, அரசாங்கத்தின் ஹத்துக்குட்படாத ஒரு சர்வ கலாசாலையைச் சில வருஷங்களுக்குமுன் ஸ்தாபித்தார்கள். அதற்குக் காசி ஹிந்து சர்வகலாசாலையென்று பெயரிட்டிருக்கிறார்கள். அங்கே சாதாரணக் கல்வி போதிப்பதோடு சநாதன தர்ம மார்க்கத்திலும், ஹிந்து மதக்கொள்கைகளிலும் அறிவைப் புகட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இக்கழகங்கள் ஆதியில் என்ன நோக்கங்களுடன் ஸ்தாபிக்கப்பட்டனவோ, அவைகளை இன்றுவரை சரிவரக் கைக்கொள்ள முடியாமற்போனது நம் துரதிர்ஷ்டமே எனினும் சில வருஷங்களுக்குமுன் பெஸண்டம்மையார் சென்னையிலும், வேறு சில ஊர்களிலும் தேசிய கலாசாலையென்ற பெயருடன், சில கல்வி ஸ்தாபனங்களை ஏற்படுத்தினர். ஆனால் அவை எந்தஸ்திதியிலிருக்கின்றனவென்று அறிவது கஷ்டமாக இருக்கிறது.

வங்காள மாகாணத்தில் போல்பூரென்னும் ஊரில், கவிசிரேஷ்டரான ஸர் ரவீந்திரநாததாகூரால் துவக்கப்பட்டு, அன்னாரின் மேற்பார்வையிலேயே நடந்துவரும் விஸ்வபாரதியென்றும் கல்விஸ்தாபனம் குறிப்பிடவேண்டியிருக்கிறது. ஆதியில் அக்கவிவாணவர் தம்பெருமைவாய்ந்த தகப்பனாராகிய தேவேந்திரநாததாகூர், தேவத்தியானஞ் செய்துவந்த சாந்தி நிகேதனம் என்ற உத்தியானவனத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தினர். அது பிறகு ஒரு பெரிய சர்வ கலாசாலையாகி, வெவ்வேறு தேசங்களிலிருந்து நிபுணர்கள் ஒருங்குகூடிக் கல்வி விஷயமான அபிவிருத்தியைக்கோரும் கல்விக் கழகமாய் விளங்குகின்றது. ஸி. எப். ஆண்டுரூஸ் என்ற பாதிரியாரும் அங்கொரு போதகராயிருந்து வருகிறார். அவர், அவ்விஸ்வபாரதியை ஒரு திவ்விய கந்தர்வலோகமெனவே பாவிக்கிறார். அங்கு வாசித்துவரும் மாணவர்கள் தினந்தோறும் விடியற்காலை சுமார் 4-மணிக்கெழுந்து, கீதங்களைப்பாடிக்கொண்டு, அக்கட்டடத்தை வலம் வருகிறார்கள்.

பிறகு காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஸ்நானம் செய்து சிற்றுண்டியுண்டு, கல்விபயில ஆரம்பித்துச் சுமார் 11-மணியானவுடன் மத்தியான போஜனங்கொள்ளுகிறார்கள். சற்று இளைப்பாறியபின் மறுபடியும் கல்வி கற்பதில் மனதைச்செலுத்துகிறார்கள். சாயந்திரங்களில் சிறுவர்கள் அநேக விளையாட்டுகளில் ஆசக்தராகித் தம்முடைய சரீரத்தைத் திடம் செய்துகொள்ளுகிறார்கள். சித்திரவேலை, சங்கீதம், தர்க்கம், நடனம், நாடகம் நடித்தல், கவிகளைச்செய்தல், முதலிய கலைகளிலும் சிறுவர்களுக்கு அறிவைப் புகட்டுகிறார்கள். அடிக்கடி விருக்ஷங்களின் நிழலில் வகுப்புகள் கூடுகின்றன. ஸ்ரீ ஹர்ஷர் காலத்தில் சிறந்து விளங்கின நாலந்தா சர்வ கலாசாலையைப் போல் இவ்விஸ்வபாரதியும் பிரசித்திபெற்று விளங்குமென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. அவ்விஸ்வபாரதியில் சிறுவர்களுக்கென ஒரு பள்ளிக்கூடமும், கலைஞானங்களில் மிகுந்த நிபுணர்களுக்கென ஒரு கல்விஸ்தாபனமும், அனாத சிறுவர் சிறுமிகளுக்காகச் சிக்ஷா சத்திரமென்ற விடுதியும் ஒரு கிராமத்தினுடைய குடிகள் சேர்ந்து உழைத்துவருவதால் விவசாயம், சமூக வாழ்க்கை, சுகாதாரம் முதலியன விருத்தியாகிச கிராமவாழ்க்கையே சீர்பெறும் என்பதை நிதரிசனமாகக் காட்டுவதற்கெனச் சுருல் என்ற கிராமத்தின் அருகில் ஏற்படுத்தப்பட்ட விவசாய பண்ணையமும், இருக்கின்றன. அயல்நாட்டார் அநேகர் இக்கல்விக் கழகத்தைக் கண்ணுற்றுத் திருப்தியடைந்திருக்கிறார்கள். இந்நாட்டினரும், அதற்கு வேண்டிய திரவிய சகாயஞ்செய்து வருகிறார்கள்.

இதைப்போலவே திருநெல்வேலி ஜில்லாவில் சேரமாதேவியென்னும் ஸ்தலத்தின்கண் ஸ்ரீமான் வ. வே. சு. அய்யர் அவர்களால் பாரத்வாஜாஸ்ரமம் என்னும் விடுதி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அங்குக் கல்வி பயின்றுவரும் சிறுவர்கள் பிரம்மசாரிகள் என்ற சிறப்புற்ற பெயரால் அழைக்கப்படுகிறார்கள். அங்கும் காலைதோறும் பஜனைசெய்தல் முதலிய சதாசாரங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. சுத்த கத்தரைத் தாங்களே நூற்று வஸ்திரமாகநெய்து உடுக்கிறார்களாம். ஆசிரியர்களும், மாணவர்களும்

அருகருகே வசிப்பதால் உபாத்தியாயர்கள் முழுக்கவனத்தை யும் செலுத்துவது சாத்தியமாகிறது. தர்மிஷ்டர்கள் இதைப் பற்றி நன்கு விசாரித்து, விஷயங்களை நன்குணர்ந்து நம் தமிழ் நாட்டில் இத்தகைய ஸ்தாபனத்தினால் நன்மை பயக்குமென எண்ணுவதானால் இதைப்போலவே வெவ்வேறிடங்களில் ஏற் படுத்தத்தவறாது பொருளுதவிசெய்ய முன்வார்களென எதிர் பார்க்கின்றோம்.

இவ்விதமானமுறை நம் தமிழ்நாட்டில் தொன்று தொட்டே பயின்று வந்ததென்பதைப் பழந்தமிழ் நூல்களாலும் அறியலாம். 'பன்னருங்கலை தெரி பட்டி மண்டபம்' எனப்பாலகாண்டத்துக் கம்பர் கூறியுள்ளார். மணிமேகலையிலும் 'ஒட்டிய சமயத்துறு பொருள் வாதிகள், பட்டி மண்டபத்துப் பாங்கறிந்தேறு மின்' எனப் புனைந்துரைக்கப்பட்டுளது. மணிவாசகப் பெரு மானார் 'பட்டி மண்டபத் தேற்றினை யேற்றினை' எனச் சொல்லி யுள்ளார். 'பந்தினை இளையவர் பயில்இட மயிலூர், கந்தனை யனை யவர் கலைதெரி கழகம், சந்தன வனமல சண்பக வனமாம், நந்தன வனமல நறைவிரி புறவம்' என்ற கம்பர் பாட்டில் நம் தமிழ்மக் கள் கல்விபயின்ற முறை தெள்ளிதிற் புலப்படுதல் காண்க.

மைலாப்பூரில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் சார்பில் ஒரு நடுத்தர பாடசாலை ஏற்பட்டிருக்கிறது. அங்கே மற்றப் பாட சாலைகள் கற்பிக்கும் விஷயங்களைக் கற்றுக்கொடுத்தாலும், மாண வர்களை நடத்தும் மாதிரி நூதன ரீதியாயிருக்கிறது. சரஸ்வதி தேவியின் ஆலயம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அங்கே சிறு வர்கள் நித்தியம் ஸ்தோத்தரங்கள் செய்யவேண்டுமெனவும், மாணவர் விடுதியில் வசிக்கும் மாணவர்கள், நல்ல நடவடிக்கையி லிருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார்களெனவும் அறிகிறோம்.

இவையொருபுறம் நிற்க, ஆங்கிலப்பயிற்சியினால், இராஜாங்க வர்க்கத்தைச்சேர்ந்த கச்சேரிகளிலும், வேறு உத்தியோகவர்க் கங்களிலும், குமாஸ்தாக்களோ, அல்லது கீழ்த்தர அதிகாரி களோ ஆவதற்கு நாம் தயாரிக்கப்பட்டு வந்திருக்கிறோம்.

தற்காலத்தில் அளவுக்கு மிஞ்சிப் பட்டதாரிகள் சென்னைச் சர்வ கலாசாலையினின்றும் வருஷந்தோறும் வெளி வருவதால், ஏற்கனவே வேலையின்றித் தவிக்கும் ஆங்கிலங்கற்ற இளைஞர்களின் தொகை பெருகிக்கொண்டே வருகிறது. தங்கள் வயல் வீடு முதலிய எல்லாவற்றையும் விற்றுச் சிறுவர்களை உயர்தர கலாசாலைகளுக்கனுப்பி அவர்கள் பட்டதாரிகளாய்விட்டபின், வேலையில்லாமல் திண்டாடுவதைப்பார்க்க, ஏழைக் குடும்பங்களுக்கு எத்தனையோ மனக்கசப்பும் கஷ்டமும் ஏற்பட்டிருக்கின்றன! இம்மாதிரியான சங்கடமான நிலைமை வங்காள மாகாணத்தில் இதனிலும் மிக்க அதிகமாய் சில வருஷங்களாக இருந்து வருகிறது. நம் சர்வ கலாசாலையைவிடக் கல்கத்தா சர்வ கலாசாலை மிகவும் நூதனமுறையில் நடத்தப்பட்டு வருவதால் அக்கல்விச் சமூகத்தின் உப அத்தியக்ஷகராயிருந்த சமீபத்தில் காலஞ்சென்ற ஸர். அஷீடோஷ் முகர்ஜி யென்பாரும் வேறு சிலரும் வேலையில்லாத்திண்டாட்டத்தினால் வருந்தும் பட்டதாரிகளைக் காக்கும் கடமை தமதெனக்கருதி, ஒரு ஏற்பாட்டைத் தயாரித்து, அதன் நகல்களை இவ்வுலகின் கண்ணுள்ள ஒவ்வொரு சர்வ கலாசாலையிலிருக்கும் நிபுணர்களுக்கு அனுப்பினார். அவ்வேற்பாடு எல்லாராலும் அங்கீகரிக்கப்படவே, அதை வங்காளத்தில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரத் துவக்கினார்கள். அந்த மாகாணத்திலேயே காஸிம் பஜார் மகாராஜா என்ற பிரபல தர்மிஷ்டர் தம்பூமிகளில் ஒரு பாகத்தைக் கொடுத்துதவினார். அவ்வேற்பாட்டைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் விவரித்தெழுதுவோம்.

சில புண்யக்ஷேத்ரங்கள்.

[By K. R. R. Sastry M. A. F. R. Econ. S. (London)]
Government Secondary Training School, Villupuram.

மதுரை, ஸ்ரீரங்கம், தஞ்சாவூர்.

(89-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

பாண்டியநாட்டுத்தலைநகரும், ரோமாபுரி பிளினியால் "மதோரா" என்றழைக்கப்பட்டதுமான மதுரைமா நகர் வந்து சேர்ந்தோம். இவ்வூரிலுள்ள சிற்ப வேலையினருமையைக் கண்டாநந்திக்க வெகு ஜனங்கள் இங்கு வருவதுண்டு.

திருமலை நாயக்கரது மஹால் அழகிய புதுமண்டபம், ஆகாயத்தை உலாவி செல்லும் கோபுரம்,—பெண்டியூர் தெப்பக்குளம் இவை முக்கியமான தோற்றங்கள். ஆசிரியர் டுப்ரீல் (Dubreil) புதுமண்டபத்தை திராவிட சிற்ப சாஸ்திரத்தின் விசேஷ நிர்மாணம் என்று கூருவதுண்டு. மதுரைக்கோயிலின் விஸ்தீரணம் மதுரைமாநகர் வாசிகளெல்லோரும் வசிக்கப் போதுமானதென்று சொல்வோருமுண்டு. வேறு ஜில்லாக்களிலிருந்து ஜீவனார்த்தம் வரும் எல்லோருக்கும் மீனாக்ஷியம்மன் கடாக்ஷம் எல்லையற்றதென்று நம்புவோருமுண்டு.

சித்ரா பௌர்ணமி உத்ஸவத்தில் அழகர் ஆற்றிலிரங்கும் பொழுது சுமார் 1 லக்ஷம் யாத்ரிகளை வைகையிற் பார்க்கலாம். தேவர் என்று வழங்கும் மரவர் இதை விசேஷ பக்தியுடன் கொண்டாடுகிறார்கள். தற்காலத்தில் ஜாதி மதபேதத்தில் மூழ்கிக்கிடக்கும் நம்மவர்களுக்கு அழகர் பெருமான் "துலுகா நாச்சியார் மண்டகப்படி"யில் இளைப்பாருவதும் பிஷர் (Fisher) என்ற ஐரோப்பியர் மண்டகப்படியும் மிகவும் முக்கியமானவை.

இவ்வளவு பெரிய சைவஸ்தலமாயிருக்கிற மதுரைமாநகரில் மதுரைவாசிகள் மிகவும் சொற்பமே. "மதுரை ஜில்லாவாசி"

என்ற விசேஷ குணம் தஞ்சை திருநெல்வேலி இவைகளைப்போல் விளங்கவில்லை. மதுரையில் மூன்றில் ஒருபாகம் ஸௌராஷ்ட்ர ஜாதியார். கைத்தொழில் மேன்மை இந்த வகுப்பினராற்றான் மதுரைக்கு வந்திருக்கிறது.

திருசிரபுரம். பாண்டியநாட்டிலிருந்து சோளமண்டலத்திற்கு செல்வதென்றால் வெகு மாறுபாடுகள் தென்படுகின்றன. அகலமான மதுரை சாலைகளிலிருந்து திருச்சியிலுள்ள நெருக்கடியான சந்துகளுக்குச் செல்வதுபோல்தான் காணப்படுகிறது. சுமார் 2 மைலுக்கப்பாலிருந்தே, உச்சிப்பிள்ளையார்கோயிலும், கிரிஸ்தவர் கோயில் ஸ்தூபியும் தோன்றுகின்றன. ஆசியாவிலுள்ள இரண்டு பெரிய மதங்களின் பெருமையையும் இங்கு ஒன்றாய்ப்பார்க்கலாம். பல்லவ ராஜாக்கள் காலத்தில் கட்டப்பட்ட பாரைக்கோயிலை புகைப்படத்தில் எடுக்காதவரில்லையென்றே சொல்லவேண்டும். அதேமாதிரி மகம்மதியருக்கு மஹம்மத் ஆலியின் சிலுவை அழகிய பள்ளி வாசலில் அமைக்கப்பட்டிருக்கிறது. திருச்சிநப்பள்ளியிலுள்ள கட்டிடங்களையும் கோயில்களையும் பார்க்கும்பொழுது, புராதன சோழ நகராகிய உரையூரை ஒருக்கால் மறக்கக்கூடும். அவ்விடத்தில் இடிந்த சுவர்களும் விழுந்த வீடுகளுமே விசேஷமாய்க் காணப்படுகின்றன.

ஸ்ரீரங்கநாதர் தர்சனம். திருச்சிக்குப்போகும் ஹிந்து மதத்தினர் யாராகிலுஞ்சரி, ஸ்ரீரங்கத்திற்கும் திருவானைக்காவலு (ஜம்புகேச்வரம்) க்கும் போகாமலிருப்பதில்லை. ஐதிகம் யாதெனில் விபீஷணர் ஸ்ரீராமரது விக்ரஹத்தை இந்தஸ்தலத்தில் பூசித்ததாகச் சொல்வதுண்டு. ஆதிசேஷரது படத்தின்கீழ் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதர் தர்சனம் வெகு பேர்பெற்றது. இந்நகரினமைப்பை ஆசிரியர் கெட்டீஸ் (Geddes) விசேஷமாக மெச்சுகிறார். வைகுண்ட ஏகாதசியன்றையதினம் காருண்ய மூர்த்தியாகிய பகவான் வைகுண்ட வாசலை எல்லோருக்கும் திறக்கும்பொழுது இவ்வூரின் தோற்றத்தை பூலோக கைலாயமோ என்று வினவலாம். புஷ்பங்களின் ஸுகந்தமும், பகவானது

விசேஷ அலங்காரமும் குமரிமுதல் காச்மீரம் வரை இங்கு தர்சனம் செய்யவந்திருக்கும் பக்தகோடிகளின் திரளும்—வெகு லாவண்யமான தோற்றங்களே.

தஞ்சை நந்தி. திருச்சியைவிட்டுப் புறப்பட்டு ஒரு பெரிய "ஜங்ஷன்" வந்துசேருகிறோம். செம்புழுதி ஆகாயத்தையுலா விப்பரக்கிறது. ராஜாவின் சத்திரம் அரண்மனை இவைகளைப்பற்றி விசேஷப்ரச்னங்கள் காதில் படுகின்றன. "தென்னிந்தியாவின் பூந்தோட்டம்" என்று வழங்கும் தஞ்சைமாநகர் வந்துவிட்டோம். பிரஹதேச்வரர் கோயிலுக்குப்போய், ஆகாயத்தை யுலாவி வளர்ந்த நந்தியை தர்சிக்கிறோம்.

சிவாஜி சக்கரவர்த்தி வம்சத்தில் பிறந்த பெருமை யொருபுரமிருக்க சர்போஜி லைப்ரேரி அவ்வளவு விசேஷமாய் ஆதரிக்கப்படவில்லை. அநேகம் அரிய ஓலைச்சுவடுகள் செல்லாலரிக்கப்பட்டிருக்கின்றன; ஆனால் சில வருஷங்களாக சென்னை கவர்ன்மெண்டார் இதை ஸம்ரக்ஷணை செய்துவருவது குறிக்கப்படவேண்டிய விஷயம். (தொடரும்)

கம்பர் கவிநயம்.

'பந்தினை யிளையவர் பயிலிட மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகஞ்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம்'

என்பது இராமாயணத்து நாட்டுப்படலத்தின்கண் வருகின்ற மிகச்சிறந்த ஓர் பாசுரமாகும். இதன்கண் கூறப்பட்டுள்ள உரைநயத்தைபாராய்வாம். கோசல நாட்டு மங்கையர் பந்துகளை ஆடுமிடம் சந்தனச்சோலைகளிலாயினும் (உய்த்தறியுமிடத்து அவையல); மற்று அவை சண்பகச் சோலைகளேயாம். மயில்வாகனத்தை ஏறி நடத்துகின்ற முருகக்கடவுளையொத்த வாலிபர் நூல்களை ஆராய்கிற கல்விச்சாலைகள் நந்தவனங்களிலிலாயினும் (உய்த்தறியுமிடத்து அவையல) மற்று அவை

தேன்பரந்த முல்லை வனங்களாம் என்பது இப்பாட்டின் றெளிந்த பொருள். முன்னிரண்டடிகளும் பின்னிரண்டடிகளுடன் முறையே சென்றியைந்து பொருள் படுதலால் இது முறை நிரனிறையணியாம். யதாசங்கியாலங்காரமென்பர் வடநூலார். மாதர் பந்தாடிடம் சந்தன வனமேயாயினும் அவர்கள் மேனி நிறத்தினாலும் சுவாச வாசனையினாலும், பந்துகள் வீசுதலால் வண்டுகள் மொய்க்காமையினாலும் சண்பக வனமெனக் கூறப் பட்டது. வாலிபர்கள் கலைபயிலிடம் நந்தனவனமேயாயினும் அவர்கள் கலைபயிலுங்கால் பற்கள் முல்லை யரும்புபோலப் பிரகாசிப் பதனாலேயும், அவர்களது மேனி முல்லை மலர்போல மணம் வீசு தலாலும், வேதமோதுங் குரலிசை வண்டுகள் பாடும் இசை போன்றிருப்பதாலும் முல்லைவனமெனக்கூறப்பட்டது. எனவே பந்தாடிய மாதரது கூட்டமிருதியும் சந்தனவனத்தின் வாசனை யையுங் கவளீகரித்து அதனினுமிக்கு அவர் தம் மேனியின்கனி யல்பாயிருந்த சண்பக வாசமே யாண்டும் பரந்திருந்ததாகலின் சண்பக வனமென்னலாம் படியாயிற்றென்ற அவரது திருமேனி யின் எழிலார் வாசமும் வருணிக்கப்பட்டபடியாம் அவரது பந் தாட்டின் சிறப்பை

'வைத்த பந்தெடுத்தலு மாலையுட்க ரத்தலுங்
கைத்தலத்தி ஞேட்டலுங் கண்ணி னெற்றி தீட்டலும்
பத்தியிற்பு டைத்தலும் பையாவி னூடலும்
இத்தி றத்த பந்தினோ டின்ப மெல்லை யில்லையே'

'அங்கையந்த லத்தகத்த வைந்து பந்தமர்ந்தவை
மங்கையாட மாலை சூழும் வண்டுபோல வந்துடன்
பொங்கி மீதெழுந்த போய்ப் பிறழ்ந்து பார்தலின்றியே
செங்கயற்கண் புருவந்தம்முன் உருவஞ்செய்யத் திரியுமே'

'மாலையுட்கரந்த பந்து வந்துகைத்தலத்தவா
மேலனாறிருங்குழற்புறத்தவான் முகத்தவா
நூலினேர்ந்த சுப்புகோவ வுச்சிமாலை யுள்ளவா
மேலெழுந்த மீதிலத்த விரலகைவ வாகுமே'

என்ற சீவகசிந்தாமணிச் செய்யுட்களிலும் அவற்றினுரையிலுந் தெளியக்காண்க. வெகுகாலத்திற்கு முன்னரேயே நம் நாட்டுப்பெண்டிர் பந்தாட்டயர்வதிற் பலவகைத்தேர்ச்சியுற்றிருந்தனரென்ற நாகரீகப்பான்மை இதனுற்றெள்ளிதிற் புலனாகின்றதன்றோ?

மயிலூர் கந்தனை யனையவர் எனக் கலைபயில்சிறாரைச் சிறப்பித்தவதனால் வித்தைக் கதிதேவதையாய் ஞானமூர்த்தியாய் விளங்கும் முருகப்பெருமானைப்போலவே பல வல்லமையுமவர் பெறுதலுறுதி யாமாறுகாண்க. மயிலாகிய அஞ்ஞானத்தை யடக்கிக்கொண்டு அதன்மேலிவர்ந்துள்ள குகனைப்போலவே அவிச்சையை யகற்றி வித்தையில் விளங்குமவ்வாலிபாது கல்வி யாற்றலைக்குறித்தே 'மயிலூர் கந்தனை யனையவர் கலைதெரி கழகம்' என்றாரென்க. இனி 'அயில்ஊர் கந்தனை யனையவர்' எனப்பிரித்து ஞான சத்திவேலையேந்திய முருகனைப்போன்றவரெனவுமித் தொடர்க்குச்சிலர் பொருள்காண்பர். இவரது மேனியின் முல்லை வாச மிகுதியான் பலஜாதி மலர்களின் பரிமளமிக்க நந்தனவனம் வாசமடங்கி, முல்லை வாசமே மிக்கதென்க. கலை பயில்பவர் பிரமசாரிகளாகலின் அவர்கள் பற்கள் முல்லையரும்புபோலிருந் தனவென்ற குறிப்பு மிதிற்றொனித்தலறிக. இனி வாலிபர் தனுர்வேதம் பயிலுமிடம் நந்தவனமல்ல காடுபோலாகும். ஏனெனில் படைபயிற்றுமிடமாதலின் அவ்விடம் போவதற்கு யாவர்க்கும் அச்சமுண்டாம் எனப் பொருள்கொள்வாருமுளர். இளையவர் பந்தினைப் பயிலிடம் சந்தனவனமேயல்ல சண்பகவனமுமாம்; கந்தனை யனையவர் கலைதெரி கழகம் நந்தனவனமேயல்ல நறைவிரிபுறவமுமாம் எனச் சிலர் உரைக்கும் உரையில் பொருட் பொலிவு விளங்காமை உய்த்துணரத்தக்கதாம். இதனாற் கலைபயில் சிறாரது சிறப்பும் அவரது தெய்வீக வன்மையும் வனப்புமினிது விளங்குதல் காண்க. இதனாற் பண்டைக் காலத்து நந் தமிழ் மக்கள் வனங்களிடத்தே மனந்தூய்தாதற்கேற்ற வசதி கொண்டு இனிது கலைபயின்று சிறந்தனரென்ற நாகரீகமேன்மை இக்கவியிற்றெளிவுறுதல் பாராட்டற்பாலதாம். இதனையே 'பன்னருங் கலை தெரி பட்டி மண்டபம்' என்று புனைந்துரைத்தனர்

பிறிதோரிடத்தும் நம் கவியரசராங் கம்ப நாடரென்க. 'பன்ன ருங்கலைதெரி' என்றதால் வேதங்களின் அங்கங்களாகிய சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், சோதிடம், கற்பம் என்பவை களையும் ஆயுர்வேதமாகிய வாகட நூல், காந்தர்வவேதமாகிய இசை நூல், தனுர்வேதமாகிய விற்பயிற்சிநூல் ஆதியவற்றையும் குறிப்பித்தமை செவ்வனே விளங்கும். மணிவாசகப்பெருமா னார் 'பட்டி மண்டபமேற்றினை யேற்றினை' யென்றிதனைத் திரு வாசகத்துட் குறித்துள்ளார். 'ஒட்டிய சமயத்துறு பொருள் வாதிகள் பட்டி மண்டபத்துப் பாங்கறிந்தேறுமின்' என்ற மணி மேகலையடியும், 'பகைப்புறத்துக்கொடுத்த பட்டி மண்டபமும்' என்ற சிலப்பதிகாரத்தொடரும் ஈண்டு நோக்கத்தக்கனவாம் எனவே நம் பழந் தமிழ் மக்கள் விழுமிய கலைபயின்று ஞானச் சுடர்மிக்கு நாகரீகமுதிர்ந்த பெரியார்களாய் விளங்கினர்க ளென்ற செய்தி மேற்கூறிப்போந்தவாற்றான் விளங்கிக்கிடத்த லின் நாமும் நம் பழந்தமிழை மறவாது மனத்துட்கொண்டு உலகைத் தமிழ்மயமாக்குந் திறத்திலூக்கங்கொள்வோமாக.

இங்ஙனம்,
பண்டிதர். ரா. திம்மப்ப ஐயர்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
முனிசிபல் காலேஜ்,
சேலம்.

புராதனக் கல்வி முறை.

[ஆர் நாகராஜராவ், பி. ஏ. எல். டி. உதவி உபாத்தியாயர்,
லண்டன் மிஷன் ஹைஸ்கூல், சேலம்.]

(46-வது பக்கத்தின் தொடர்ச்சி)

மகாபாரதத்திலிருந்து அறிபவை. மகாபாரதத்தில், ஆரண்யபர் வத்தில் சில உபாக்கியானங்களிருக்கின்றன. சாவித்திரி உபாக்கி யானமும் சகுந்தலோபாக்கியானமும் அவற்றுள்முக்கியமானவை.

சாவித்திரி சரித்திரத்திலிருந்து, புராதனக்கல்விமுறையைப் பற்றிச் சில ருசிகரமான விஷயங்களை நாமறிகிறோம். த்யுமத்ஸேனர் தன் ராஜ்ஜியத்தை யிழந்தபின் தன் பத்தினியுடனும், தன் மகன் சத்தியவானுடனும் அசுவபதியினுடைய ராஜதானியினருகாமையிலுள்ள நந்தவனத்தில் ஆசிரமங்களை ஏற்படுத்தித் தானும் மற்றுஞ் சில ரிஷிகளும் வசித்துவந்ததாக வறிகிறோம். அசுவபதிராஜரும் அடிக்கடி அந்தப் பெரியவரைக் கண்டு, அவர்களுடைய குறைகளைத் தீர்த்துவந்ததாகவுந் தெரிகிறது. மேலும், ராஜகுமாரியாகிய சாவித்திரியும், சாஸ்திர புராணாதிகளையும் அநேக இதிஹாஸங்களையும், நந்தவனத்திற்குச் சென்று வாசித்துவந்ததாகவுமறிகிறோமல்லவா? ஆசிரமத்தில் வசித்துவந்த சிறுவர்கள் விறகுவெட்டியும், பூஜைக்கும் யாகத்திற்கும் வேண்டிய பூக்கள், தர்ப்பை, சமித்து முதலியவற்றைச் சேகரித்தும் ஓய்வு நேரங்களைக் கழித்ததாகவுமறிகிறோம்.

சகுந்தலையின் சரித்திரத்திலிருந்தும் நாமறியக்கிடக்கிற விஷயங்கள் பல. கண்ணுவ ரிஷிசிரேஷ்டருடைய ஆசிரமத்தில், தற்காலத்தில் யூனிவர்ஸிடி என்று கூறப்படும் சர்வகலாசாலையொன்று, அக்காலத்திலிருந்து வந்ததாக ஒரு பிரபல நூலாசிரியர் கூறுகிறார். காளிதாசர் தமது உலகப்பிரசித்திபெற்ற, சாகுந்தல நாடகத்தில் எழுதியிருப்பதிலிருந்து, சாரங்கரவர், சாரத்வதர் முதலிய விப்ரசிரேஷ்டர்கள், அச்சர்வ கலாசாலையில் வித்தியார்த்திகளாயிருந்தார்களென்று ஊகிக்கக்கூடியதாகவிருக்கிறது. கண்ணுவமகரிஷியிடம் அவர்கள் காட்டிவந்த அன்பு அளவிடவியலாதது. கௌதமி முதலிய ஸ்திரீகளும், அங்கே படித்துக்கொண்டிருந்ததாகவு மறிகிறோம். கண்ணுவமகரிஷியும், அடிக்கடி வெளியூர்களுக்கு யாகாதிகளைச்செய்யவும், கல்வி விஷயமாகவுஞ் சென்றுவந்ததாகவும், துஷ்யந்தன்போன்ற அரசர்கள் வேட்டையின் நிமித்தம் அப்பக்கம்சென்றால் கண்ணுவர்போன்ற மகரிஷிகளைத் தரிசித்து, அன்னவர் குறைகளைத் தீர விசாரித்து ஆன்றோர்களின் ஆசிமொழிகளைப்பெற்றுத் தம் நாட்டுக்குச் சென்றதாகவுமறிகிறோம். அக்கல்விஸ்தாபனங்களும், அவைகள் இருந்த இடங்களும், ஜனங்களால் மிக்க சிரேயஸ்கர

முடையனவாய்க் கருதப்பட்டிருந்தமையினால், அங்கு வசிக்கும் மான் முதலிய மிருகங்களையும் பக்ஷிகளையும், வேடர்கள் ஹிம்சை செய்யத் துணியார்கள். ஏதாவதொரு நிமித்தம், அவ்வாஸ்ரமத்தில் வசிக்கும் சிஷ்யர்கள், நகரவெல்லைக்குள் புக்கால் அவர்களை ஜனங்கள் வெகுவாக உபசரிப்பார்கள். ஆனால் அவர்கள், அங்கேயே தங்கியிருக்க விரும்பாமல் உடனே வனப்பிரதேசத்திற்கே திரும்புவார்கள்.

சில முக்கியமான புராதன கல்விஸ்தாபனங்கள். கிருதயுகத்தில் பெரிய நகரங்களைக் காணமுடியாது. ரிஷிகள், காடுகளில் பர்ணசாலைகளைக் கட்டிக்கொண்டு வசித்துவந்தார்கள். அவர்களை நெருங்கிச் சிடர்கள் கல்விகற்று வந்தார்கள். ஒவ்வொரு குருவும் பத்துச் சிஷ்யர்களுக்கதிகப்படாமல் ஸ்வீகரித்து ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு சாஸ்திரத்தைக் கற்றுக்கொடுப்பது வழக்கமாயிருந்ததாம்.

சுமார் 2700-வருஷங்களுக்குமுன் கிருஷ்ணவேதகர்ப்பரென்றவர் அரசாண்டுகொண்டிருந்தபொழுது அவர் சிறுவர்களுக்காகத் தம் ராஜ்ஜியமுழுவதிலும் பாடசாலைகள் ஏற்படுத்தினாராம். அவைகளில் வாசித்துவந்த சிறுவர்கள் வீடுதோறும் பிச்சையெடுத்து வயிறுவளர்த்துவந்தார்கள். ஸ்ரீபுத்தர் அவதரித்தகாலத்திலும், பின்பும் தேசமெங்கும் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருந்தனவென்றறிகிறோம். உயர்தரக் கல்விகளைக்கற்க, தேசமெங்கும், பிரம்மாண்டமான கல்விஸ்தாபனங்கள் ஏற்பட்டன. அவற்றில் முக்கியமானவற்றைப்பற்றிக் கொஞ்சம் கூறுவோம்.

நாலந்தா. நாலந்தா கலாசாலை ஏற்படுத்தப்பட்ட ஸ்தலம், ஆதியில் ஒரு மாந்தோப்பாக இருந்து மிக்க செல்வங்கொடுத்து அந்தத் தோப்பை 500 வியாபாரிகள் ஒருமிக்க வாங்கி புத்தருக்கு வாசஸ்தானமாக இருக்கும்படி கொடுத்தாராம். புத்தர் காலத்திற்குப்பின் 5, 6 அரசர்கள் அவ்விடத்தில் 5, 6 பெரிய பௌத்தகோவில்களையும், மடங்களையுங் கட்டுவித்தார்களாம் அப்பெரிய கட்டடங்களைச்சுற்றி உயர்ந்த மதிற்சுவர் நாளா

வட்டத்திலெழுப்பப்பட்டது. ஏழாவது நூற்றூண்டில் இந்தியாவிற்கு வந்த ஹயூன் த்ஸியாங்கென்ற சீனயாத்திரிகர், அங்கு சுமார் 5 வருஷங்கள் தங்கியிருந்து புராதன மதக்கிரந்தங்களைச் செவ்வனேவாசித்துச்சென்றதாக வறிகிறோம். இங்கு, பிராம்மணர்களும் பௌத்தர்களும், பிரதேசத்து ஜனங்களும் புராதன சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்யவந்தார்கள். பத்தாயிரத்திற்குக் குறையாமல் பௌத்தபிக்ஷுக்கள் இங்கு வசித்துக் கொண்டிருந்தார்கள். மதவிஷயமான பிரசங்கங்கள் நடைபெற விசாலமான கூடங்கள் ஏராளமாய் அங்கிருந்தன.

அப்பிக்ஷுக்களெல்லோரும் சதாசார சீலர்கள். கல்வி கேள்விகளில் நிபுணர்கள். தினமுழுதும் சளைக்காது தம் சிடர்களுக்குக் கல்வியைக் கற்றுக்கொடுத்தார்கள். தாமும் தம் குருக்களிடம் கற்றுவந்தார்கள். வெளியூர்களிலிருந்தும் வெளித்தேசத்திலிருந்தும் அங்கு வரும் வித்தியார்த்திகளை எந்த ஜாதியினராயினும், மிக்க பரிவுடனும் மரியாதையுடனும் வரவேற்று உபசரித்தார்கள்.

பாணினியென்ற இலக்கண நிபுணரும், ராஜீய நூல்களில் விற்பன்னராகிய சாணக்கியரும், இக்கலாசாலையிலிருந்தவர்கள்.

தக்ஷசைலம். புஷ்பபுரி (Peshawar)க்கு சமீபத்திலிருந்து வந்த கல்விஸ்தாபனமிதுவே. இது மேற்குத்தேசங்களுக்கும், இந்தியாவிற்கும் நடுவிலிருப்பதால் இது எளிதில் பிரக்கியாதியடைந்தது. இங்கு வைத்தியமுறைகளில் சிறந்த கல்வி போதிக்கப்பட்டது. ஆத்திரேயர், ஜீவகர் முதலிய வைத்தியசாஸ்திர நிபுணர்களிருந்து வந்த கல்விஸ்தாபனமிதுதான்.

ஸ்ரீதனகடகா. விதர்ப்பதேசத்தில் கிருஷ்ணாநதிக்கரையில் ஸ்ரீதனகடகாவென்ற ஸ்தலத்திலொரு கல்விஸ்தாபனமேற்படுத்தப்பட்டிருந்தது. அதன் சிறப்பு கிருஷ்ண நாகார்ஜுனரென்ற மன்னருண்டகாலே மேலோங்கியிருந்தது.

சாரதாபீடம். சுமார் 1600 வருஷங்களுக்கு முன் காஸ்மீர தேசத்தில் சாரதாபீடமென்ற பிரசித்தபெற்ற கல்விஸ்தாபனம் மேற்படுத்தப்பட்டது. நான்குவாயில்களுள்ள, ஒருசரஸ்வதி கோவிலங்குண்டு. அங்கே வருஷத்திற்கொருமுறை பண்டிதர்கள்

வெளியிற் குழுமியிருக்கும் ஜனங்களைத் தங்களுடன் வாதாட அழைத்து அவர்கள் தகுந்தபடி தேர்ச்சியடைந்திருந்தால் அவர்களை உள்ளேவிடுத்து, சன்னதியிலழைத்துச்சென்று, அக்கலைவாணியை மனமகிழத் தேகம் புளகாங்கிதமாகத் தரிசிக்க அனுமதிப்பார்கள். அவ்விதம் உட்சென்றவர்களுள் அத்வைத மதஸ்தாபகரான ஸ்ரீ சங்கராசாரியரும் ஒருவராவர். மேலும் அக்காஸ்மீரதேசம், சமஸ்கிருத பாஷையில் தேர்ச்சிபெற்ற கவிச்சிரேஷ்டர்களுள் பெரும்பாலோருக்கு ஜனனஸ்தானமாயிருந்து வந்திருக்கிறது. பன்னிரண்டாவது நூற்றாண்டில் காஸ்மீரவாசியான கல்ஹாணனென்னும், கவி, ராஜதரங்கிணியென்ற நூலில் தனது காலம்வரை இத்தேசத்தில் சம்ஸ்கிருதத்தில் தேர்ச்சியுடைய கவிகளின் ஜீவிய சரிதைகளைக் காலக்கிரமப்படி கூறியுள்ளார். அதிலிருந்து அவர் காலம்வரை காஸ்மீரதேசத்தில் மட்டும் சுமார் 120 கவிஞர்கள் வாழ்ந்திருந்ததாகவறிகிறோம்.

காசி. புண்ணிய க்ஷேத்திரமாகிய காசியும் கல்விபயிலச் சிறந்த நகரமாயிருந்தது. இவ்விடத்தில் இலக்கண சாஸ்திரத்தில் நற்பயிற்சியளிக்கப்பட்டது.

நவத்வீபம். பாடலீபுரத்தினருகிலே, நவத்வீபமென்ற ஸ்தலம், தர்க்க சாஸ்திரத்தில் பாண்டித்தியம் பெற விரும்பும் சீடர்களுக்கு உறைவிடமாயிருந்தது.

ஸ்ரீரங்கம். தென்னாட்டில், ஸ்ரீரங்க க்ஷேத்திரம் தத்வ சாஸ்திரம் கற்கவிரும்புவோருக்கு சிறந்த ஸ்தாபனமாகவிருந்து.

காஞ்சி. காஞ்சிபுரம் மீமாம்ஸம்பயிலும் வித்தியார்த்திகளுக்கு சிறந்த ஸ்தாபனமாகவிருந்தது.

விக்கிரமசைலம். சற்றேறக்குறைய 1200-வருஷங்களுக்குமுன் விதர்ப்பநாட்டில் உதாந்தோபுரியென்னும் நகரின்கண் ஒரு பிரம்மாண்டமான புத்தகாலயமிருந்தது. இதனருகில் விக்கிரமசைலமென்னும் சிறந்த கல்விஸ்தாபனமேற்பட்டிருந்தது

இச்சர்வ கலாசாலையின் மேற்பார்வைக்குள் ஆறு கலாசாலைகளி ருந்தனவாம். கல்வி கற்கும் மாணவர்களுக்கெனவே ஒரு தனி விடுதி (Students' hostel) ஏற்பட்டிருந்ததாம். வெளிதேசத் தினரும் இக்கல்விக்கழகத்திற்கு வந்து கல்விப்பயிற்சி யடைந் தார்களாம். பலருக்கு இலவசமாகவும், ஒரு சிலருக்கு லகுவான சம்பளத்தைப்பெற்றும் கல்வி போதிக்கப்பட்டதாம்.

விஜயநகரம். சுமார் 700 வருஷங்களுக்குமுன் தென்னிந் தியாவில் விஜயநகரத்தின்கண், ஒரு சிறந்த கலாசாலை ஏற்படுத்த ப்பட்டது. அதன் அத்யக்ஷகர் வித்தியாநாதர் என்னும் மகான். அவர் விஜயநகர அரசாங்கத்தின் மந்திரிப்பதவியை வகித்திருந் தார். வேதங்களுக்குப் பாஷ்யம் எழுத விரும்பி அவ்விதம் செய்வோர் கொஞ்சகாலமாவது, அரசனாக இருக்கவேண்டு மென்ற ஐதிகத்தை யநுசரித்து, அவ்விஜயநகர அரசனுடைய அனுமதியின்பேரில் கொஞ்சகாலம், அத்தேசத்தையரசாண்டு பின் வனம் புக்கு, வேதங்களின் உட்கருத்துக்களை விளக்கி அநேக சிறந்த நூல்களையியற்றினர்.

உஜ்ஜயினி. மால்வாதேசத்தின்கண் உஜ்ஜயினியென்ற நகரத்தின்கண், கணிதமும், வான சாஸ்திரமும் வெகு ஊக்கத் துடன் ஆராயப்பட்டுவந்தன என்றறிகிறோம். இப்போதும் அந்நகரத்தினருகில் முற்காலத்தில் ஆகாயத்தில் காணப்படும் கிரகங்களையும் நக்ஷத்திரங்கள் முதலியவற்றையும் கவனிப்பதற் காகக் கட்டப்பட்ட கட்டடங்களின் சின்னங்கள் காணப்படு கின்றன.

இம்மாதிரியாகவே நம் தேசமெங்கும் கல்விபயிற்சிகளில் முற்காலத்தில் சிறந்த ஊக்கமெடுத்துக்கொள்ளப்பட்டதென எல்லோரும் ஊகிக்கக்கூடியதாக இருக்கிறது. (தொடரும்.)

(93-வது பக்கத்தின் தொடர்ச்சி)

ஷெடி ஐயரவர்கள் 'மீனாட்சி சுந்தரம்பிள்ளை' யவர்களது பிரபந்தத் திரட்டைத் தமிழபிவிருத்தி கருதி உபகரித்தபோது இயற்றியது.

கோச்சகக் கலிப்பா.

24. உத்தமதானபுர மதிலுறையு முத்தமரே
வுத்தமதா னம்புரிய வரியர்தமிழ்ப் புலவர்க்கோர்
உத்தமதா னத்திலுமே யுயர்ந்துளை நீமிகவென்று
லுத்தமதா வென்றேற் குவந்திதல் முறையன்றோ?

[மகிபாலன் பட்டி நண்பர் ஸ்ரீமத் வித்வான் முகதிரேசச் செட்டியாரவர்கள் 'மேலைச்சிவபுரி' சன்மார்க்க சபையில் 'சமய சாத்திரம்' என்பதைப்பற்றிப் பிரசங்கித்தபோது சொல்லியது.]

இருவிகற்ப நேரிசை வெண்பா.

25. சான்றோர் புகழ்சமய சாத்திரத்தைச் சார்பாக
வேன்று பல ருங்களிப்ப விங்குரைத்தான்— [தோன்றுஞ்சீர்
மிக்ககதி ரைப்பரப்பி மேன்மையுறச் செய்துவரும்
தக்கார் புகழ்கதிரே சன்.

[சென்னை வரகவி திரு. அ சுப்பிரமணிய பாரதியாரவர்கள் எழுதிய 'சிநேகலதா' என்னும் நூலைக்குறித்த அபிப் பிராயத்தைச் செய்யுளாகப்பாடியது.]

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

26. 'சீராருஞ் செந்தமிழின் சொல்வளமும்
பொருள் வளமுஞ் செறிந்து சேர
ஏராருஞ் 'சிநேகலதா' வெனவுயருந்
மொருநூலை யிருங்க டல்சூழ்
பாராரும் பகைத்திறந்தீர் புலவரெலாங்
கொண்டாடப் பண்பி னீந்தான்
பேராரு நண்பன்சுப் பிரமணிய
பாரதியாம் பெரியன் மாதோ'

[(ஹானரபில்) வக்கீல் ஸ்ரீமத் ப. வே. நரசிம்ம ஐயரவர்கள் ஈரோடு மஹாஜனகழகத்துப் பழைய மாணவர் சங்கவிழாவில் தலைமைவகித்தபோது பாடியது.]

அறுசீரடியாசிரிய விருத்தம்.

27. எங்கும் புகழ்பெறு மெங்கள் மகாசனக் கழகம் [விருப்புடனே
தங்கு மகத்துவ துங்க நரசிம்ம அன்பன் [தழைக்குகவே
பொங்குந் தொகைநனி யுதவி நெடும்புகழ் [பொருந்து சபையினரும்
அங்கை வளைபுனை யமல னருண்மிக அமர்ந்து [வாழியவே

[சங்கப்பரீட்சை மாணவர் பரிசளிப்புக் கொண்டாட்டத் தன்று சேலம் முனிசிபல் கலாசாலையில் திவான் பகதூர் அரசியில் அமைச்சர் ஸ்ரீமத் சிவஞானம் பிள்ளையவர்கள் அவைத்தலைமை வகித்த காலை இயற்றியவை]

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

28. தண்மதி தரித்த வேணித் தனிப்பெருங் கடவுளீந்த
பண்கெழு மினிமை வாய்ந்த பைந்தமிழ் வாடுமிந்நாட்
கண்ணெனக் கருணைகூர்ந்து தழைத்துறக் காக்கு [மிந்த
மண்புகழ் வள்ளல் பாண்டித்துரை சிறந்தினிது [வாழ்க

29. பார்புக ழமுதத் தீந்தண் டமிழ்மகள் பானி வாழ்க
சீருறு மவைத்தலைமைச் செழுஞ்சிவ ஞானன்வாழ்க
ஆர்தரு கல்விச்சாலை யதிபனுஞ் சூட்டி வாழ்க
ஏர்பெறு மெங்க ளாசான் எழில்சிறந் திலங்க மாதோ

['அருச்சுனன் தீர்த்தயாத்திரை' நூலாசிரியரும் அரிய நண்பருமாகிய தளவாய்ப்பேட்டை அரங்கநாத கவிராஜரின் செய்யுளருமையை வியந்து பாடியது.]

நிலைமண்டில அகவற்பா.

30. தளவாய்ப் பேட்டைத் தண்டமி ழரங்க!
உளங்கொண் டியற்று முசிதப் பாக்கள்
தெள்ளிய நின்சீர் தெரித்திடுமன்றோ?
ஆகவு நின்பீ டறைவான் புகுதன்
மிகையா மன்றே? மீக்குணக் குன்றே!
சிறந்திடு தாரோய் செம்மலாண் டகையே!

பால்பருவமும் அதன் பராமரிப்பும்.

[By Dr. S.R.A. Challan, F.I.A. Sc., Assistant Surgeon, Dharmapuri.]

(86-வது பக்கத்தின் தொடர்ச்சி)

தின்பண்டங்கள் உட்கொள்வதில் கெட்டபழக்கம்:— குழந்தைகளுக்குப் பலதினுசு தின்பண்டங்கள் வரம்பின்றிக்கொடுத்தல் பழக்கத்திலிருந்து வருகிறது. வகைவகையான ருசியுள்ள உணவுப்பொருள்களை அனுவசியமாக குழந்தைகளுக்கு அளவின்றி அளிப்பதால் கணக்கிலாக் கஷ்டங்கள் விளைகின்றன வென்பதை பெற்றோர்கள் மறந்துவிடுகிறார்கள். இனிப்பு மிட்டாய்களும், கார சரக்குகளும், பக்ஷணக்கடைகளில் ஒழுங்குபட வைத்திருப்பதும், பெப்பர்மிண்டு முதலிய பலவர்ண பளபளப்புள்ள மேனாட்டுச் சிற்றுண்டிகள் கண்ணாடி அரைகளுள் நிறப்பியிருப்பதும் சிறிய பாலர்களின் கண்களைக் கவரவே, சிறுவர் சிறுமியர் அம்மயக்கிலீடுபட்டு, பெரியோர்களிடத்தினின்றும் எவ்விதமேனும் பணம்பெற்று அவைகளை நினைத்தபோதெல்லாம் வாங்கித் தின்கின்றனர்.

பெரியவர்களைவிடக் குழந்தைகள் இரண்டொரு வேளைகள் அதிகமாக சாப்பிடுவது கிரமமேயொழிய மற்ற காலங்களில் சிற்றுண்டியருந்துவது பிசகு. குழந்தைகளுக்கு உணவில் சர்க்கரை சேர்த்திருத்தலவசியமேயாயினும் முறைப்படி சாப்பிடும் வேளைகளில்லாது இடையிடையே உபயோகிப்பதால் கெடுதி நேரிடும். சாதாரணமாகவும், முறைப்படியும் உட்கொண்டு சௌக்கியமாய் ஜீர்ணித்துக்கொள்ளக்கூடியவைகளைவிட்டு அளவிற்கு அதிகமாய்த்தின்று சிரமப்படுவதைப் பணக்காரக்குழந்தைகளிடத்தில் சகஜமாய்க் காணலாம்.

தனவான்கள் இளைஞர்பால் கொண்டுள்ள வாத்ஸல்யத்தால் அவர்களிஷ்டப்படி செலவுசெய்ய பணம் கொடுக்கின்றனர். அச்சிறுவர்களுக்கு வேறு செலவில்லாமையாலும், நல்ல வழிகளில் உபயோகிக்கத் தெரியாமையாலும் அவர்கள் அநேகமாய் பக்ஷண பதார்த்தங்களையே வாங்கித் தின்ன பழகிக்கொள்கின்றனர். இத்துர்ப்பழக்கம் ஓர் வியாதிபோல் தொத்திக்கொள்வதன்றியில் ஜீவாதாரமான ஜீர்ணக்கருவிகளைக்கெடுத்து அவை செய்யும் கிரமமான வேலையைப் பாதித்து தேகஸ்திதியைத்தலைகிழாய்ப் புரட்டிவிடுகிறது. சாதாரண உணவுக்குத் துணையாய் இச்சிற்றுண்டி சேருவதால் நாளடைவில் பசி குன்றிச் சாப்பாட்டையே வெறுக்கவும் செய்கின்றது.

குழந்தைகளுக்குச் சில இனிப்புப்பதார்த்தங்களவசியம்:—தின்னக்கூடாதவைகளை குழந்தைகள் சாப்பிடவொட்டாமல் தடுப்பது கஷ்டமாயிருக்கிறது. தாய்மார்களே சில சிறுவர்களுக்குத் தீனிப்பழக்கஞ்செய்விக்கின்றனர். அவ்வப்போது சொஞ்சமாக சரியானபடி சர்க்கரை சேர்ந்த பதார்த்தங்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டியது அவசியமே. ஆனால் நல்ல தின்பண்டங்களைக் குழந்தைகளுக்குக் கொஞ்சமேனுமளிக்காதிருந்தால் அவைகளிற் சிலர் திருட்டுத்தனமாக அவற்றைப்பெற முயலுவதை நாம் காண்கிறோம்.

இனிப்புப்பதார்த்தங்கள் எவ்வாறு பற்களை பாதிக்கின்றன:—வரையறையின்றிப் பக்ஷணங்களை குழந்தைகள் சாப்பிடுவதால் நாளடைவில் அவர்களுடைய பற்களின் நிலைமை கெட்டுவிடுகிறது.

அதுவுமன்றி ஜீர்ணக்கருவிகள் பாதிக்கப்பட்டும், வாய் அசுத்தப்பட்டும், ஈறுகள் அடிக்கடி வீங்கி கடைசியாகப் பற்களின் அசைவும் ஏற்படும். பல தினுசு பதார்த்தங்கள் தவருக உட்கொள்ளுவதால் உடனே பாதிக்கப்படாவிடினும் பற்களுக்கும் ஈறுகளுக்கும் இயற்கையாயுள்ள ஒரு வித உணர்ச்சியானது குன்றி சிறு குழந்தைகளுக்குப் பல் முளைக்குந்தறுவாயில் நேராகவும் அழுத்தமாகவும் முளைப்பதைக்கெடுத்துவிடும். பல் முளைக்கும் சமயத்தில் ஏதாவது தடைகள் ஏற்பட்டுவிட்டால் தாய்க்கும் குழந்தைக்கும் தொந்திரவு ஏற்படும். தேக அமைப்பு நாளுக்கு நாள் இப்பருவத்தில் வித்தியாசப்படுவதால், குழந்தைகளின் தேகஸ்திதியின் சம நிலையைக்காக்க வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். பக்ஷணங்களைவிட பழங்கள் குழந்தைகளுக்கு ஏற்றவை. பக்ஷணங்கள் செய்வதில் உபயோகிக்கப்படும் பதார்த்தங்கள் சுத்தமாயிருவிடின், அவற்ருல் ஏற்படும் தீமைகளைப் பற்றி அதிகம்சொல்லத்தேவையில்லை.

ஆங்கிலத்திலிருந்து S. A. நரசிம்மய்யரால் மொழி பெயர்க்கப்பட்டது.

(தொடரும்.)

சிவப்பிரகாச சுவாமிகளைப்பற்றிய சில கதைகள்.

லால்குடி. சே. கந்தசாமி, (தமிழ்—ஆசிரியர்,)
குடியாத்தம், [வட ஆற்காடு ஜில்லா.]

" 'கங்குநரையின்றிக் கஷ்டப்படவேண்டும்,' என்றே அலரவன் அன்று என் தலையில் எழுதிவிட்டான் போலும், அவன் எழுதிய எழுத்தை அழிப்பது முடியாத காரியமாகையினல் நான் கஷ்டத்தை அநுபவிக்கின்றேன். கண்ணே !—அலமேலு ! நீயும் என்னத்திற்காக இப்படி அல்லலுற்று வருகின்றனை ? வருத்தமுருதே! நீ சந்தோஷமாயிருந்தால்தான்-நான் சந்தோஷமாயும், மனவமைதியுடனும் கூடியிருக்க முடியும். இல்லாமற்போனுல், இத்தேக வியாதி ஒன்று போதாதென்று மனவியாதியும் சேர்ந்து கொள்ளும். அப்போது, உள்ளே இருந்து புழு பழங்களைப் பயன்படாதனவாக்கிவிடுமாறு போல, மனேவியாதி, என்னைக் கெடுத்து

உருக்கிவிடும். ஆகையினால்,—கண்ணே!—அடிக்கடி இவ்வாறு கலக்கப்படாதே!" என்று, தன் கண்களில் கண்ணீர் ததும்ப, வியாதிமேலீட்டால் படுக்கையோடு படுக்கையாய்ப் படுத்துக்கொண்டிருந்த கருணாகரர், தன் மனைவியின் முகத்தை நோக்கி மொழிந்தார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அலமேலு கண்களில் கண்ணீர் ததும்பிற்று. அவள் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். தன் உயிருக்குயிரானவர் கண்களில் கண்ணீர் கிளம்பக்காண, அவள், ஆற்றாளாகி, அவர் பக்கம் நகர்ந்தமர்ந்து தாயைக் காட்டிலும் கருணையுடன், "பிராணநாதா! நான் இருக்கிறவரையில், உமக்கு ஊறு நேராவண்ணம் காத்துவருகின்றேன்' ஏன் இவ்வாறு கலக்கப்படுகிறீர்கள்? நான் வருத்தப் படுவதாகக் கூறுகிறீர்களே! நான் என்ன வருத்தப் படுகின்றேன்? தாங்கள், தமது திருக்கரத்தால் முடிந்த இம் மஞ்சட்கயிறு இருக்கிறவரையில் எனக்கென்ன குறை? ஒன்றுமில்லை;" என்று சொல்லித் தன் புடவையின் தலைப்பினால், அவர் கண்களினின்றும் கன்னத்தில் வழிந்துகொண்டிருந்த கண்ணீரைத் துடைத்தாள். பிறகு, மறு பக்கமாகத் திரும்பிக்கொண்டு, தன் கண்களினின்றும் கிளம்பித் தரையில் விழலாமா—வேண்டாமா வென்று தயங்கிக்கொண்டிருந்த இரண்டொரு கண்ணீர்த்துளிகளையும் துடைத்துக் கொண்டாள்.

அவள் தன் மேல் வைத்திருந்த அன்புக்கு எல்லை இல்லை என்பதைக் கண்டு கொண்ட கருணாகரன், உடனே, "கண்மணீ! எனக்காக, நீ, 'வருத்தப்படவில்லை,' என்று சொன்னவளேயன்றி வாஸ்தவமாகச் சொன்னவளல்ல வென்பது எனக்கா தெரியாமற் போய்விடும். அகத்தினழகு முகத்திற் றெறியும், என்பது போல் உன் முகம், உன் உள்ளத்தில் உரைந்திருப்பதை வெளியிடுகின்றது. சூரிய கிரணம் பட்டதும், தாமரை மலர்ந்து, தன் மணத்தை நாலாபக்கங்களிலும் பரப்புவது மான, என் கண்ணொளி உந்தன் வதனாரவிந்தத்தில் பட்டதும், மலர்ந்து, அன்புடன் சந்தோஷம் என்னும் மணத்தையும் வெளிப் பரப்பும்.

ஆனால், சென்ற இரண்டு மூன்று நாட்களாய் என் முகத்தைக் காணுந்தோறும், உன்னிரு விழிகள் கண்ணீர் சமுத்திரத்தில் நீந்துகின்றன. அதற்குக் காரணம் என்ன? பளபளப்புடன் ரோஜாவர்ணம் பொருந்தியிருந்த உனது கன்னங்கள், ஒட்டிக் குழிந்து இருக்கின்றன. 'இரவி காணாத கஞ்சம் போலவும், மாரிகாணாத பயிர்போலவும், இந்து காணாத குமுதம் போலவும், கரைகள் காணாத ஓடம் போலவும், இன் சொற்காணாத விருந்து போலவும், கோவைக்காணாத கன்றுபோலவும், தாயைக்காணாத சேயைப்போலவும், சோடு காணாத பேடுபோலவும்'' வாடி வருந்திக் கலங்கிக் கிடக்கின்றது. என்ன சொல்லி, எவ்விதமாக உன் முகத்தை மாற்றிக்கொண்டாலும் என் கண்களுக்குத் தோன்றாமற் போகாது,'' என்று சொல்லி முடித்தார்.

அப்போது அலமேலு, "அன்பரே! நம்மிருவருக்கும் உயிர் ஒன்று; உடல் இரண்டு என்பதை மறந்து போயிருக்க மாட்டீர்கள் என்றெண்ணுகிறேன். தங்களுக்கெய்தும் துன்பமும், துயரமும், எனக்குத் தூரத்திலிருப்பனவா? நீங்கள் சந்தோஷத்துடனிருந்தாலன்றி நான் எவ்விதம் சந்தோஷத்துடனிருக்க முடியும். நாதா! ஒரு நாளல்ல—இரண்டு நாட்கள் அல்லவே! வாரக்கணக்கு முடிந்து மாதக்கணக்கும் வந்துவிட்டது. வைத்தியம் செய்தாற்றானே வியாதி தெளிவடையும்! 'கடவுள் காப்பாற்றுவார்'; — 'கடவுள் காப்பாற்றுவார்;' என்று இருந்துவிட்டால் எப்போதுதான் நோய் தீருவது? 'தெய்வங் காட்டுமே யன்றி ஊட்டாது,' என்று யாரும் சொல்ல நாம் கேட்டிருக்கிறோமே! 'சுவாமி சோறு தருவார்; சுவாமி சோறு தருவார்;' என்று நம்பி நடுக்கூடத்திலமர்ந்து, 'ஆ' வென்று வாயைப்பிளந்து கொண்டு உட்கார்ந்திருந்தால், வாயில் வந்து விழுமா சாதம்? தெய்வானுகூலத்துடன் நாப் பிரயத்தனமும் கூடியிருந்தாற்றான் காரியங்கள் நன்றாய் ஈடேறும். ஆகையினால்,—பிராணபதி!—தாம் உத்தரவு தாருங்கள்! நான் போய், நல்ல வைத்யர் ஒருவரைநாடித் தேடி வருகிறேன்,'' என்று ஆராய்ந்த இரத்னுபரணங்களை யணிந்த அலமேலு, அன்புடன் சொல்லி முடித்தாள்.

உடனே, "நீ சொல்வது வாஸ்தவமே யானாலும் நான் ஒன்று சொல்லுகிறேன், கேள்!

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது.

என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார். ஆகையினால், ஊழ் வினையை மாற்றல் முடியாத காரியம். எனக்கிப்பொழுது எய்தி யிருக்கும் நோய் ஊழ் வினையால் வந்ததென்றறி. ஆதலினால், வாளா விருப்பதே வாய்ந்தது;" எனத் தன் புருஷன் புகன்றதைச் செவியுற்ற அலமேலு, "பிறகு தங்களிஷ்டம். ஆனால், தாங்கள் பள்ளியில் வாசித்திருக்கும் காலத்தில், அதே திருவள்ளுவ நாயனார்,

'தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும்'

என்று சொல்லியிருப்பதையும் வாசித்திருப்பீர்களே! மேலும், இன்னும் சில பெரியோர்,

'உலைபா முயற்சி களைகணா, ஊழியன்—
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறிய
பான் முளைதின்று, மறலி உயிர் குடித்த
கான முளையே போலுவ, கரி.'

என்று கூறியிருப்பதையும் தயவுசெய்து கவனிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்," என்று பதில் இறுத்தாள்.

அப்போது அன்னவர், "தெரியிழாய்! இப்பொழுதுதான் எனக்கும் ஞாபகம் எய்திற்று. நீ சொல்வது சரியே!" என்று தலையசைத்தார். அதற்கென்று நல்லவைத்யர் தேடுதலும் வேண்டும் என்று சொன்னார். அதனைக் கேட்டதும் அலமேலு, "பிராண பதி! தங்களுக்குத் தெரியாத விஷயம் என்ன சொல்லப்போகிறேன். நாலம்பு செல் தூரத்திற்கப்பால் உள்ள துறைமங்கலம் என்னுங்கிராமத்தில் சிவப்பிரகாசர் என்று ஒரு சுவாமிகள் மடங்கட்டி வசித்து வருகிறார். தாம் உத்தரவு கொடுத்தால், அவரிடம் சென்று, இதிவிஷயத்தில் என்ன சொல்லுகிறாரோ,

அதைக்கேட்டு வருகிறேன்,'' என்று சொல்லித் தன் புருஷன் உத்தரவின்மேல் துறைமங்கலம் சென்றாள். மடாதிபதியாம் சிவப்பிரகாசசுவாமிகளைத் தரிசித்தாள். வணங்கினாள். கண்ணீர் கம்பலையுடன் தமனாளன் ஸ்திதியைக் கூறினாள். இது விஷயத்தில், சாலை தன் புருஷனுடன் நடந்த சம்பாஷணையையும் சொன்னாள்.

அச் சம்பாஷணையைக் கேட்ட சிவப் பிரகாச சுவாமிகள், நேரிழாய்! நீ சொல்லுவது போல் மனுஷ்யப்பிரயத்தனமும் செய்யவேண்டியது தான். அதன் பொருட்டு, நல்ல வைத்யரைத் தேடி வைத்யம் செய்யவேண்டுவது அவசியத்திலும் அவசியம். எனக்கு எவ்வளவோ வைத்யர்களைத் தெரியும். அவர்கள் எல்லாரிலும் சமய சஞ்சீவியே மேம்பட்டவர் என்பது என் கொள்கை. வயதிலும், அநுபவத்திலும், கை ராசியிலும் அவருக்கு மிஞ்சியவர் ஒருவரும் இல்லை. .... வைத்தியர்களிலும்கூட நல்லவர்—கெட்டவர் என இருபாலார் உண்டு. கெட்டவர்கள் என்போர் பணம் பறிப்பதிலேயே நோக்கமுள்ளவர்களாயிருப்பார்கள். வியாதியைத் தெளிய வைப்பதற்கு முன்னால் வெள்ளையப்பனைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள். வைத்யம் செய்து கொண்டிருக்கும்போதுகூட கொஞ்சங் கொஞ்சமாய்ப் பணம் பறிக்கந் தக்க வழிகளைக் கையாடுவார்கள். அவர்கள் கேட்ட பணத்தைக் கொடுக்காவிட்டால், கோபங் கொண்டு மறுபடியும் வியாதியைக் கிளப்பி விடுவாகள்.

ஆனால், பெரியோர்கள் (நற்குணங்களில் பெரியோர்) மன்னுயிரைத் தன்னுயிராகப் பாவிப்பார்கள். பிறருக்கு வந்த நோயைத் தன்னுடம்புக்கு வந்த நோயாய்க் கருதுவார்கள். எரியின் இடமாக உள்ள இழுது ஆவார்கள். தெரியிழாய்! அந்த நல்ல வைத்யர் கண்ணுக்குச் சமானமானவர்கள். வியாதிஸ்தர் அக் கண்ணைப் பெற்றுள்ள உடம்புக்குச் சமானமானவர்கள். உடம்பின் பிற உறுப்புக்கள் மண்டு பிணியால் வருந்துவதைக் கண்டு கண் கலுழ்வது போல, அவர் பிறர் நோய்கண்டு வருந்தி, அது சீக்கிரம் சௌக்யம் ஆகத்தக்க வழிகளைத் தம்மால்

ஆனவரையில் அனுசரிப்பார்கள். சமய சஞ்சீவி வைத்யரைப் பற்றி நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. இன்னும் நாலைந்து இடங்களில் விசாரித்துப்பார். உனது புருஷன் வியாதி சிக்கிரத்தில் சௌக்யப்படும் மார்க்கத்தைத் தேடு'' என்று சொன்னார்.

* * அலமேலு, அதனைச் செவியுற்று, சந்தோஷம் அடைந்து, சமய சஞ்சீவியைக் கொண்டே தன் புருஷன் உடம்பைத் தேற்றிக் கொண்டாள். * * * * * *

* * சிவப் பிரகாச சுவாமிகளுக்கு, கருணாகரர் உடம்பு முற்றிலும் தெளிவடைந்தது என்ற சமாசாரம், இரண்டு மூன்று தினங்களில் எட்டியது. அப்போது, அவா அதிகச் சந்தோஷமடைந்து, அலமேலுக் குரைத்த மொழிகளை எண்ணி யெண்ணிக் கீழ்வரும் செய்யுளை யியற்றி, ஞாபகார்த்தமாகக் குறித்துக் கொண்டார்.

"பெரியவர் தம் நோய்போல் பிறநோய்கண் டுள்ளம்
எரியினி ழுதாவரென்க;"—தெரியிழாய்!
"மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்டைக்
கண்டு கலுழுமே கண்;" [நன்னெறி ... 20]

ஹொகேனக்கல்.

தர்மபுரி தாலூகா பென்னுகரத்துக்கு மேற்கே ஒன்பதாவது மைலில், காவேரி நதி ஓடுமிடம் "ஹொகேனக்கல்" என்ற ஒரு திவ்யஸ்தலம். இம்மகத்தான க்ஷேத்திரம் பண்டை நாட்களில் பெருமை பெற்ற மஹரிஷிகளின் ஆசிரமங்களாக இருந்தது. இது இயற்கையற்புதங்களின் களஞ்சியமெனக் கூறத்தகுந்த அமைப்புக்களையெல்லாம் உடைத்தாயிருக்கிறது. பூமியின் ஏற்ற இறக்க மேற்பரப்பும், சுற்றிலும் அழகிய சிறு குன்றுகளும், பசுமையான பட்டாடைகள் பரப்பப்பட்டன போலத் தோன்றும் மலைச்சாரல்களும் பள்ளத்தாக்குகளும், நிறைந்து, ஆகாயத்தை யளாவிச்செல்லும்பல விருக்ஷங்

களும், செடி, கொடி, புல், பூண்டு முதலிய செழிப்புற வளர்ந்திருப்பதைப் பார்ப்பதற்கு மிக்க ரமணீயமாயிருக்கும். இவ்வழகிய வன நடுவே, காவிரியாறு, இருபிரிவாகி இடையே ஓர் தீவு உண்டாக்கிக்கொண்டிருப்பதும், ஓர் இடத்தில் குறுகிய இரு பெரும் பாரைகளிடையினின்றும் வெகு ஆழத்துக்கிழே துள்ளி வீழ்வதும், அதனால் ஏற்படும் நீர்த்திவலைகள் யாக குண்டத்தினின்றும் எழும்பும் புகைபோல் ஆகாயத்தை நோக்கிக் கிளம்புவதும் பிரமிக்கத்தக்கனவே.

இவைகளும், சங்கு சக்ர முதலிய அஷ்ட தீர்த்தங்களும், பற்பல ஸ்நான கட்டடங்களும், தேவாலயங்களும், தரிசிக்கும் ஒருவருக்கு சர்வேஸ்வரனின் சிருஷ்டிப் பெருமைகள் ஞானானந்தத்திலாழ்த்துமென்பதற்கையமில்லை.

பிரதி வருஷமும் ஆடி ஐப்பசிமாதங்களில் திரளான ஜனங்கள் யாத்திரையாய் இத்திவ்யஸ்தலத்திற்கு வருகின்றனர். அப்படி வரும் யாத்திரிகர்கள் வந்து சௌக்யமாய்த் தங்கியிருக்க நதிக்கரைகளில் சப்பாத்தி, புதர் வகைராக்களை எடுத்து சுத்தப்படுத்தி, செப்பினிடவும் யாத்திரைக்காலங்களில்குப்பை முதலியவற்றை அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தி இராக்காலங்களில் விளக்குகள் போட்டு சுகாதார விஷயங்களை கவனித்து, மற்றுமுள்ள பல நன்மைகளையும் சௌக்யமுறச்செய்யுமாறு 15-7-1918-௳ முதல் பென்னுகரத்தில் ஓர் சங்கம் ஏற்பட்டு செவ்வனே நடந்துவருகிறது. அச்சங்கம் "ஹொகேனக்கல் காவேரி பொதுஜனோபகார ஊழியச்சங்கம்" என வழங்கப்பட்டுவருகிறது. பிரதி வருஷமும் பொதுஜனங்களிட நன்கொடைபெற்று மேற்சொன்ன கைங்கர்யங்கள் செய்யப்படுகின்றன. செலவுபோக மிகுதியை நாளதுவரை சேர்க்கப்பட்டு ரூ. 900 மூலதனமாக இப்போது கையிருப்பிலிருக்கிறது.

முக்யமாய் இப்போது ஷை ஸ்தலத்தில் யாத்திரிகள் தங்கத்தகுந்த கட்டடங்களில்லாததுதான் ஓர் பெருங்குறை இதை நிவர்த்திக்குமாறு தனவந்தர்களும் பரோபகாரத்திலீடுபட்ட பெரியோர்களும் கருணைபுரிந்துதவுவார்களென நம்புகிறோம்.

வருஷாந்திர அறிக்கையும் ஸ்தலமகிமை முதலிய விஷயங்களும் அடுத்த முறை வெளிவரும்.

பென்னுகரம்,
19—7—24.

(Sd) R. வெங்கடேசய்யங்கார், காரியதரிசி.
ஒகேனக்கல் காவேரி பொது ஜனோபகார ஊழியச்சங்கம்.

"ஆடிப்பெருக்கம்"

குறிப்பு :—'ஆடி' மாதத்தை ஹிந்துக்கள் யாவரும் ஆவலுடன் வரவேற்பது வழக்கம். ஏனெனின் வருஷத்திற்கே இம் மாத ஆரம்பதினம்தான் முதற்பண்டிகையாக இருந்துவருகின்றது. மேலும் ஆனி மாதத்தில் சில பயிர்கள் அறுவடை செய்து பின் புதியனவும் விதைத்துவிட்ட குடியானவர்கள் சற்று இளைப்பாரவும் பண்டிகைகள் முதலியன கொண்டாடத் தகுந்த காலமாகவுமிருக்கிறது. தென் மேற்குப்பருவ மழை மிகுதியால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஜலாதாரங்கள் வருஷாந்திர நீரை நிலைக்கப்பெறும் சமயமாயுமிருக்கிறது. நிலங்களின் பாய்ச்சலாதாரங்கள் நிரம்பப்பெற்று, தமக்கு அதனால் ஏற்படக்கூடிய சந்துஷ்டியை அறிந்தவர்களாய் யாவரும் தத்தம் நன்றியறிந்து பரம கருணாநிதியான சர்வேஸ்வரனுக்கு நோன்புகளாலும், யாத்திரை உற்சவம் முதலிய கொண்டாட்டங்களாலும் வெளியிடுகின்றனர். தமது பெருக்காலும் பெருக்கற்ற நாளில் தமக்குள் அடங்கியிருக்கும் ஊற்றாலும், 'உலகை ஊட்டுவிக்கும்' படியான புண்யநதிகளுக்கு தீர்த்தயாத்திரை செய்கின்றனர். நமது அருகாமையில் தெய்வநதியாயிருக்கும் காவிரியாற்றில் இம்மாதத்தில் ஏற்படும் பெருக்கை ("ஆடிப் பெருக்கம்" என்றும் "ஆடிபதினெட்டு" என்றும்) இம்மாத பதினெட்டாம் நாளில் பல ஜாதியினரும் போய் ஸ்நானம், பூஜை முதலியன செய்து 'விழா' எனக் கொண்டாடிவருவது வழக்கம். நம் தாலூக்காவில் காவிரி ஓடும் ஸ்தலத்தை "ஹொகேனக்கல்" என்று சொல்லுவர். ஆடி, ஐப்பசி மாதங்களில் இங்கு திரளான ஜனங்கள் கூடுகின்றனர். இச்சந்தர்ப்பங்களில் ஹொகேனக்கல் காவேரிக்கடுத்த பென்னாகாம் ஜனோபகாரச்சங்கம் தம் அரும்பெரும் முயற்சியால் யாத்திரிகர்களுக்கான பற்பல வசதிகளையும் செய்துவருவது மிகவும் பாராட்டற்பாலது. இதுசம்பந்தமான விவரங்களை இச்சஞ்சிகையின் 124, 125 பக்கங்களில் பிரசுரித்திருப்பதை வாசகர்கள் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டுவது அவசியம்.

* * *

இவ்வருஷரும் காவிரி, பவானி, முதலிய நதிகளும் அவற்றின் உபநதிகளும், சிற்றாறுகளும் தம் எதிரிலும் பக்கங்களிலும் தாராளமாகப் போகவிடாது தடையாயிருந்ததால் சிறி கோபாவேசங்கொண்டு, பவானி, சத்யமங்கலம், ஸ்ரீரங்கம், திருச்சினாப்பள்ளி முதலிய பட்டணங்களையும் அவற்றின் இடையே இருந்த பல பெரு சிறு கிராமங்களையும் தமது விபரீத வெள்ளப் பெருக்கால் கணக்கிலாச் சேதம் விளைவித்து விட்டதோ வென நாம் நினைக்குமாறு பிரவாஹித்துவிட்டன. அராபிக் கடலினின்றும் வங்காளாக்குடாக்கடல் வரை தென்னிந்தியாவில் மேற்கிலிருந்து கிழக்கே ஒரே அளவாய் ஜலப்ரவாஹமாக இருந்தது இப்பொழுது தான் முதன் முறையெனப் பலர் அபிப்பிராய முறுகின்றனர். * * *

காவிரியாற்றின் கரையிலிருந்த பல கிராமங்களில் வெள்ளப் பெருக்கால் ஏழை ஜனங்கள் படும் பாடு வெகு பரிதாபகரமாயிருக்கிறது. அநேகர் வீடுவாயில்களைத்துறந்தும், அளவிடமுடியாத தானியராசிகள், தட்டுமுட்டுச் சாமான்கள் முதலிய பற்பல பொருள்களையுமிழக்கவும் நேர்ந்த துயரம் நிர்வகிக்கக்கூடாததே.

* * *

மேற்குக்கரையிலுள்ள மலையாளம், தென்கன்னடம், குடகு, மைசூர் முதலிய இடங்களில் மழை விசேஷித்து, அங்குள்ள பல ஆறுகளும் பெருக்கிட்டுச் செய்த அட்டூழியங்கள் கணக்கில. * * *

நாலுதிக்குகளுக்கும் போக்கு வரவு சாதனங்களான பல ரஸ்தாக்களிலுமுள்ள சில பாலங்கள் அடியோடு தகர்க்கப்பட்டும் சில பெரும் பாலங்கள் சிற்சில பாகங்களில் சிதைவுறவும் நேர்ந்துவிட்டது. தெற்கு வடக்குப்ரயாணத்திற்கு அத்யாவசியமாயிருந்த கொள்ளிடப்பாலம் அழிவுற்றது. காவேரிப்பாலமும் உடைக்கப்பட்டுவிடுமோவென சமுசயப்படவும் நேர்ந்து தப்பிவித்தது தெய்வச்செயலே.

* * *

காவேரியின் கிளைநதிகளும் பற்பல வாய்க்கால்களும் அங்குமிங்கும் சிறிதுபெரிதாய் உடைப்பெடுத்து ஓடி வழியிலுள்ள வயல்களை மண்ணாலும் மணலாலும் நிரப்பி இருந்த பயிர்களை அழித்ததன்றி, மராமத்து செய்யப்பட்டாலொழிய உபயோகத்திற்கு லாயக்கில்லாதன வாக்கிவிட்டன. இக்கஷ்டங்களுக்கிலக்கான திருச்சி, தஞ்சை ஜில்லாக்களின் நிலைமை வெகு பரிதாபகரமானதாயிருக்கிறது. * * *

இதனிடை, மதுரையையடுத்து ஓர் பூகம்ப அதிர்ச்சியும் வெங்கோட்டை யருகே ஓர் பூமி வெடிப்பும் ஏற்பட்டு தத்தம் வலிமையைக்காட்டினமையால் ஜனங்கள் அநேக கஷ்ட நஷ்டங்களுற்றனர் என்பதையும் நாம் குறிப்பிட வருந்துகிறோம்.

* * *

இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தாரும், ஸ்தலஸ்தாபன அதிகாரிகளும், சமூக ஊழியச்சங்கத்தினரும், மற்றுமுள்ள பல தர்மஸ்தாபனங்களும் சபைகளும் முன் வந்து, வீடுவாயலற்று, உடுக்க உண்ண உணவின்றிப் பரிதபிக்கும் நம் ஏழை சகோதர சகோதரிகளுக்கு தகுந்த உதவிபுரிந்து காப்பாற்றுவார்களென எதிர்பார்க்கிறோம்.

* * *

எங்கும் வெள்ளப்பெருக்கால் பரிதபிக்க நேர்ந்த இந்நாளிலுங்கூட நமது ஜில்லாவில் மழையில்லாது தவிக்கும் பரிதாபத்தையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை—தெய்வமே நின் கருணை !

மதிப்புரை.

"கொங்குவேள்"

ஈரோட்டினின்றும் வெளிவரும் "கொங்குவேள்" என்னும் அழகிய நாமம்பூண்ட செந்தமிழ்ச் சஞ்சிகையின் முதல் மூன்று இதழ்கள் வரப்பெற்றோம். இச்சஞ்சிகை தன் பெயருக்குப்பொருத்தமாய், கொங்குநாட்டுச் சிறப்பையும், அந்நாட்டினர்க்குரிய வேதாந்த சித்தாந்த இலக்கண இலக்கிய சாஸ்திர சரித்திர ஆராய்ச்சிகள் முதலிய விஷயங்களையும் எடுத்துக்கூறி, கொங்கு நாட்டினரின் முற்போக்கைத்தூண்டும் நோக்கங்கொண்டது—தமிழ் ஆங்கிலத்தில் கற்றறிந்து அனுபவம் வாய்ந்த பல பிரமுகர்களால் விஷயங்கள் எழுதப்பட்டு, பழையகோட்டை பட்டக்கார் ராய்பகதூர் ஸ்ரீமான் நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியாரவர்களின் வாழ்த்து மொழியுடன் வெளிவந்துளது. செந்தமிழ்ப்புலமையும் பத்திரிகானுபவமுமுள்ள தி. அ முத்துசாமி கோனாரவர்களை ஆசிரியராகக் கொண்டது. தமிழபிமானிகளெல்லாம் படித்துப் பயனடையத்தகுந்தது.

வருஷசந்தா ரூ 2—8—0.

குறிப்புகள்.

1. ஜலத்திலும் நிலத்திலும் போகக்கூடியதான ஓர் மோடார் பைசிகள் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இருபுறமும் சட்டித்தோணிகள் (Pontoous) அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஜலத்தில் காலிலழுத்தும் 'பெடல்கள்' சுழல்வதால் பைசிகள் செலுத்தப்படுகின்றது. நிலத்தில் சாதாரண மோடார் பைசிகள் போவது போல் ஒடுகிறது.

2. இங்கிலாந்தில் ஒரு மனிதனுடைய இடதுகண்ணில் வெகு தினங்களாக வலி ஏற்பட்டு, அதை நீக்கக்கருதி ஒரு டாக்டரிடம் காட்ட அவர், அக்கண்ணின் மேற்புறத்தில் நெற்றியில், ஒரு துளை செய்துபார்க்க, கண்குழியில், சுமார் ஒரு அங்குலத்திற்கு மேல் புல் முளைத்திருந்ததாம். காற்று வாசனையில்லாத அவ்விடத்திலும், புல் பச்சை நிறத்துடன் செழிப்புடனிருந்ததாம்.

3. ஓர் அதிசயப்பிரவி. மைசூர் சமஸ்தானம் தேவணகரெ என்னும் ஊரில் ஓர் மாது, இரண்டு தலைகள், நான்கு கண்கள், நான்கு காதுகள், இரண்டு மூக்குகள், இரண்டு வாய்கள் அமையப்பெற்ற ஓர் குழந்தையைப் பெற்றனள். பிறந்ததும் குழந்தை இறந்துவிட்டது. தாய் சௌக்யமாய் இருக்கின்றனள்.

4. சிறிப்பதே வழக்கமில்லாதவர்கள். இலங்கைத்தீவின் அடர்த்தியான காடுகளின் குகைகளில் வசிக்கும் 'வெட்டர் (Veddas) என்னும் ஜாதியினர் சுமார் 2000 வருஷங்களாக சிரிப்பு என்பதையே அறியாதவர்களாய் இருக்கிறார்களாம். இதர மனித சஹவாசமே கிடைக்கப்பெறாது வௌவால், ஆந்தை, காக்கை முதலியவற்றை அம்பெய்துகொன்று தின்னும் வழக்கமுள்ள அவர்களுக்கு சிரிப்பு என்ற மனவெழுச்சியே கிடையாது. ஒல்லியாயும் சக்தியில்லாதவர்களாயும் இருக்கிறார்கள். ஒருவராவது புஷ்டியாய் இல்லை. சில நாட்களுக்குமுன் ஓர் சாஸ்திர நிபுணர் அவர்களில் ஒருவனையணுகி உள்ளங்காலில் சொரிந்தும் அக்குளைகளில் கிசுகிசுப்பு செய்தும் இன்னும் பலவிதங்களில் முயன்று பார்த்தும் சிரிப்புமூட்டவே முடியவில்லையாம். (ஹிந்து)

கற்பகம்.

ஓர் செந்தமிழ் மாத சஞ்சிகை

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், வைத்தியம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், இராஜாங்க விஷயம், ஜனங்க சீர்திருத்தம், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்கள் வித்வத் சிரோன்மணிகளால் எழுதப்பட்டு வெளிவந்தலவுகிறது. மானேஜர்.

"கற்பகம்" ஆபீஸ், புதுவை.

சதானந்த போதினி.

(ஓர் மாதாந்தரத் தமிழ்ச் சஞ்சிகை)

☞ ரக்தாக்ஷி-ஹூ சித்திரை-மீ முதல் வருட ஆரம்பம்.

இதை எல்லோரும் ஆதரியுங்கள்!

இதில் எவர்க்கும் எளிதில் விளங்கத் தக்க இனிய தெந்தமிழ் நடையில் சுவைபொருந்த பிரபல வித்வசிரோன்மணிகளால், எல்லா வகுப்பினர்கட்கும் உபயோகமாம் பற்பல நீதிநூல், காவியம், புராணம், இதிகாசம், சுகாதாரம், கைத்தொழில், வர்த்தகம், விவசாயம், மாதர்கட்கான கற்பிலக்கணம், மாணவரொழுக்கம், தேசாபிமானிகள் சரித்திரம், இலக்கிய விலக்கணவாராய்ச்சி, பொதுவிஷயங்கள், நவீனக்குறிப்புகள், இனிய நாவல்கள், பஞ்சாங்கம் முதலிய நானு விஷயங்களும் புனைந்து வெளிவரும். இதை ஆண், பெண் இருதாத்தாரும் வாங்கிப்படித்து நற்பயனடைவதற்கென்றே சந்தாவைக் குறைக்கப்பட்டது.

உள்நாட்டிற்கு வருட சந்தா ரூ. 1 0 0

பினங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்கட்கு ,, 1 8 0

விலாசம் (மாதிரி காப்பி இனும்.)

"சதானந்த போதினி" பத்திராலயம், மாயவரம்.

ஓர் இனிய செந்தமிழ் நாவல்

இராஜகோபால சந்திரவதனுள்

அல்லது

மாந்திரீக உச்சாடனம்.

முதற்பாகம் ரூ. 1—4—0 இரண்டாம் பாகம் ரூ. 1—4—0 இரண்டு பாகமும் ஒரேடயத்தில் வாங்கினுல் ரூபாய் இரண்டுதான்.

(தபாற்கூலி வேறு)

விலாசம்:—"ஸ்ரீபாரதி வாணி" அண்டு கோ; மங்கநல்லூர்.

சர்க்கார் அனுமதிபெற்ற

தர்மவித்யா பிரைஸ்சீட்டு

(தர்மபுரியில் சமஸ்கிருத இலவச பாடசாலை ஏற்படுத்த)
ரூ. 7500 ஐ 2050 பிரைஸ்களாக கொடுக்கப்படும்.
1925-ளு மே-மீ 29-உ பிரைஸ் துலுக்கப்படும்.
டிக்கட் 1-க்கு அணா 0—8—0.

தர்மபுரியில் இலவச சமஸ்கிருத பாடசாலை ஏற்படுத்த திரவியம் சேகரிக்கும் பொருட்டு ஷை பிரைஸ் சீட்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் இதை க்கண்ணுறும் நேயர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய பந்துக்களுக்கும் சிநேகிதர்களுக்கும் சிபார்சுசெய்தும் டிக்கட்டுகளைப்பெற்றும் டிக்கட்டு புஸ்தகங்களை விற்றும் நமக்கு பணம் அனுப்பிக்கொடுத்து ஷை பள்ளிக்கூட த்தை ஏற்படுத்த தகுந்த உதவிபுரியுமாறு கோறப்படு கிறது.

மெம்பர்கள்:—(1) **M. N.** ராமசாமி செட்டியார்-இனும்தார் & தாலூகா & ஜில்லா போர்டு மெம்பர்; (2) **P. R.** அச்சுதய்யர்—மிட்டா ஜமீன்தார்; (3) **P. R.** சேதுராவ்—இனும்தார்; (4) **T. G.** செங்கல்வராயன் லியாண்ட் லார்ட் & யூனியன் போர்டு மெம்பர்; (5) **P. S.** கிருஷ்ணன்—மானேஜர், சஞ்சீவி பிரஸ்.

குறிப்பு:—பிரைஸ் சீட்டு புஸ்தகங்களும், பிரைஸ் விவரங்கள், கண்டிஷன்கள் அடங்கிய நோட்டீஸ் முதலியவைகளும் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி தருவித்துக்கொள்ளுமாறு கோறப்படுகிறது.

சகல கரெஸ்பாண்டன்சுகளும் மணியார்டர்களும் இவ்விலாசத்திற்கே செய்யவேணும்.

P. S. கிருஷ்ணன்,
மானேஜிங் டைரெக்டர்,
தர்மவித்யா பிரைஸ் சீட்டு.
தர்மபுரி, சேலம் ஜில்லா.

சஞ்சீவி அச்சுக்கூடம்.

தர்மபுரி சேலம் ஜில்லா.

நேர்த்தியான அச்சுவேலைகள்.

——— :0: ———

கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பாரங்கள் ரிஜிஸ்டர்கள் முதலியன உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு எங்களிடத்தில் எப்பொழுதும் ஆஜரில் கிடைக்கின்றன. விலை சரசமாய் கொடுக்கப்படும். தேவையுள்ளவர்கள் ஷை விலாசத்திற்கு ஆர்டர் செய்யவேணுமாய் கோறப்படுகிறது.

1. டிஸ்டிரிக்ட் முன்சீபு கோரட்டு பாரங்கள் :— வக்காலத்து, படிமிமோ, நக்கல்மனு முதலிய சகலவித பாரங்களும்,

2. விலேஜ் முன்சீபு கோர்ட்டு, பஞ்சாயத்து கோர்ட்டு இவைகளுக்குத் தேவையான சாக்ஷி சம்மன், பிரதிவாதி சம்மன், டிக்ரி நிறைவேற்று மனு முதலியவைகளும்,

3. எலிமெண்டரி பள்ளிக்கூடங்களுக்குத்தேவையான மாதாந்திர வருஷாந்திர கணக்கு பாரங்கள் **(Monthy and anrual return forms)**, பையன்கள்— உபாத்தியாயர்கள் தினசரி குறிப்பு ரிஜிஸ்டர்கள் **(Boys and Masters' Attendence Registers)**

4, கோவாபரேடிவ் சொசைடிகளுக்குத் தேவையான ரிஜிஸ்டர்கள், பாரங்கள்,

புத்தகங்கள், பத்திரிகைகள், நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும் தமிழிலும் சீக்கிரமாகவும் சரசமாயும் செய்துதரப்படும்.

புக்பைண்டிங், முதலிய வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மானேஜர்—சஞ்சீவி அச்சுக்கூடம்,
தர்மபுரி.

புத்தகங்கள் புத்தகங்கள்

ஹிந்துக்களுக்கு மிக அவசியமான புத்தகங்கள்.

ஆசிரியர் :—மைலாப்பூர் **K. S.** சேஷகிரி ஐயர் எழுதியவை.

		ரூ.	அ.	பை.
1.	மஹா பாரதவசனம் (முதற்பாதி)	1	0	0
2.	இஹபரசுகம் அல்லது 50 மஹாத்மாக்கள் ஞானிகளின் அமுத மொழிகள்	0	8	0
3.	பால ராமாயணம்	0	6	0
4.	விவேகானந்தர் சரித்திரமும் உபதேசங்களும்	0	8	0
5.	ஈஸ்வரானுக்ரஹத்தையும் பேரானந்தத்தையும் பெறுவதற்குறிய வழி	0	4	0
6.	'எல்லாம் நானே' அத்வைத உண்மையைவிளக்கும் புத்தகம் ...	0	2	0
7.	உத்தம பத்தினிகள் ...	0	2	0
8.	ஈஸ்வரலீலே (திருவிளையாடற் சுருக்கம்)	0	8	0
9.	உத்தம பக்தர்கள்	0	2	0
10.	**'Dozen Weapons' in English**	0	8	0
11.	**The 'Mahabaratha' in English**	0	10	0

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

K. S. சேஷகிரி அய்யர்.

43, ந்யூஸ்ட்ரீட், மைலாப்பூர்.

மதராஸ்.

படங்கள்! படங்கள்!!

கார்டு சைஸ் படங்கள்.

தங்கள் தேவைக்கு விரைந்து எழுதுங்கள்.

இதுபோன்ற அழகிய லீலாவினோதப் படங்கள் யாரும் வரவழைத்திருக்கமாட்டார்கள். இந்தப்படங்கள் தனியாய் பாரிஸ் பட்டணத்திலிருந்து வரவழைத்திருக்கிறோம். வெகு நேர்த்தியாய் பார்ப்பவர் மனதைக்கவரும் வண்ணம் பளபளப்பும் கலரும் கலரில்லாமலும் கூடிய கார்டு சைஸ் படங்கள்.

1 நெ.	டஜன் 1-க்கு	2—8—0
2 நெ.	....	2—0—0
3 நெ.	....	1—8—0
4 நெ. கலர் புஷ்பங்கள், குழந்தைகள்		1—0—0

பாக்கிங் போஸ்டேஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—

பி. எஸ். ராய், புதுவை.

இனாம்! இனாம்!!

கீழேகண்ட சாமான்களில் ஒன்றை வாங்குபவர்கட்கு

பாரிஸ் வாசனைபுட்டி 1, பவுடர் டப்பி 1, அணியில் வைக்கும் வாசனை பொட்ளம் 1, முகத்திற்கு போடும் கிரீம் புட்டி 1. ஆகிய நான்கு சாமான்களும் அடங்கின பெட்டி ஒன்று இனாம்.

மப்ளர் செண்டு	ரூ	3—8—0	லேபுளோர்	ரூ	3—0—0
ஓல்ட் செண்டு	,,	3—8—0	எஸ்மி	,,	3—0—0

தீர்வை, பாக்கிங் போஸ்டேஜ், பிரத்தியேகம்.

இன்னும் அநேகவித செண்டுகள், சோப்புகள், பவுடர்கள் விலை சகாயமாய் சில்லரையிலும், மொத்தமாயும் கிடைக்கும். வேண்டிய தினுசுகளுக்கு விலை விபரத்திற்கு எழுதவும்.

ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் இரண்டுவித வாசனை கார்டுகள் இனாமாக அனுப்பப்படும்.

ஜி. எஸ். ஏஜென்ஸி, புதுவை.

"தர்மபோதினி"

ஏஜெண்டுகள் தேவை! ——— தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்!!

தெய்வபக்தி நல்லுணர்ச்சி, கல்வி, நாகரீகம், சரித்திர ஆராய்ச்சி, இயற்கை ஞானம் ஆகிய அருமையான விஷயங்களடங்கிய ஓர் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை. சந்தா தொகையை முன்பணமாக அனுப்பவேண்டும். அல்லது வி.பி. மூலமாய் முதல் சஞ்சிகையை ஒரு வருஷ சந்தாவைச்செலுத்திப் பெறவேண்டும். வருஷ சந்தாவை மணிஆர்டர்செய்து பத்திரிகையைத் தருவித்துக்கொள்வது லாபகரமானது.

வி. பி. செலவு பிரத்யேகம்

உள்ளூர் வாசிகளுக்கு வருஷ சந்தா	ரூ.	1	4	0
வெளியூர் வாசிகளுக்கு ,,	,,	1	8	0
வெளிநாடுகளுக்கு ... ,,	,,	2	8	0
தனிப்பிரதி	,,	0	3	0
ஜீவிய சந்தா	,,	25	0	0

பத்திராதிபர், தர்மபோதினி, தர்மபுரி.

அறிவிப்பு

வியாபாரிகளே உங்கள் சரக்குகள் நாடெங்கும் பரவி நல்ல லாபம் கொடுக்க "தர்மபோதினி" யில் விளம்பரஞ் செய்யுங்கள். சொற்ப செலவில் வெகுதூரத்திலுள்ளவர்களுக்கும் உங்கள் சரக்குகளைப்பற்றி அறிவித்து வியாபாரத்தை விருத்தி செய்து கொள்ள ஏற்ற சாதனம்.

விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்,
"தர்மபோதினி"
தர்மபுரி, சேலம் ஜில்லா

உ

7-AUG 1924

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை.

இப்பெயர்கொண்ட செய்யுள் நூல் தள்வாய்ப் பேட்டை அரங்கனுக கவிராஜராலியற்றப்பட்டுச் சமீபத்தில் வெளி வந்துள்ளது. இதில், அர்ச்சுனன் தீர்த்தயாத்திரைச் சிறப்பு, மும்மணமாண்பு, முகுந்தன் பெருமை, நதி, கடல், மலை, நாடு ஆகியவற்றின் சிறந்த வருணனை முதலியன மிக நன்ருகக் கூறப்பட்டுள்ளன. இதனைப்படிப்போர் பழந்தமிழ் நூல் எனவே இதனைக்கூறுகிறபர் என்பது முற்றுந்தேற்றமாம். 1500 செய்யுள்கொண்ட இந்நூலின் விலை ரூபாய் 1—4—0 தான். ஒரேசமயத்தில் 12 பிரதிகள் வாங்குவோருக்கு ரூ.1 வீதம் தரப்படும். வேண்டுவோர் கீழ் குறித்த விலாசத்திற் கெழுதிப் பெறலாம்.

இங்ஙனம்,

பண்டித ரா. திம்மப்ப ஐயர்,

தலைமைத் தமிழ்ப்பண்டிதர், முனிசிபல் காலேஜ்

வீரபத்திர சுவாமி கோயில் தெரு, சேலம்.

Tel Address—"KADAR STORE"

தந்தி விலாசம்—"கதர் ஸ்டோர்."

☞ அசல் கதர் ஜவுளிகள்!

எங்களிடத்தில் சொந்தப்பார்வையில் தயார் செய்த வேஷ்டிகள், ஷர்ட்டிங் கோட்டிங்கிஜுசுகளும், சிட்டி திஜுசுகளும், பலவித கலர்களில் ஓரங்களில் சரிகை, பட்டுக்கரை முடிகள், சாதா வெள்ளை முடி அங்கவஸ்திரங்கள், சேலம் திஜுசு பட்டு சரிகைகளால் செய்த பேட்டுக்கரை வேஷ்டிகளும், தாலினால் செய்த பேட்டுக்கரை வேஷ்டிகளும், துண்டுகளும், சேலைகள், தாவணிகள், தலைப்பாக்கள், தொப்பிகள், ஷால்வைகள், கைக்குட்டைகள், கொட்டடி, சாதா துண்டுகள், லுங்கி திஜுசுகள், இன்னும் அநேக ரகங்களில் கிடைக்கும். வியாபாரிகளுக்கு விலை மிக்க சரசம்.

N. கோவிந்தராவ், கதர் ஸ்டோர், ஈரோடு.

Printed and Published by P. R. Srinivasan at the Sanjivi Press, Dharmapuri.